Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீமுருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் சில நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P: 060 2212472
(சி/2201)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 22 (14.02.2004) சனிக்கிழமை இதழ் :136

## சுதந்திரக்கட்சியின் அமைப்பாளராக பிரதமர் ரணிலின் உறவினர் நியமனம்!

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சொந்தத் தொகுதியான பியகவில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உறவினர் ஒருவரை ஜனாதிபதி சந்திரிகா நியமித்திருப்பதாகத் தெரியவருகிறது.

சாலித விஜேசுந்தர என்ற பிரதமர் ரணிலின் நெருங்கிய உறவினரே சுதந்திரக் கட்சி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மே 6 ஆம் திகதி முதல் உயர்தரப் பரீட்சை!

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்களம் நேற்று அறிவித்தது.

அத்துடன், பொதுத்தேர்தல், வடமேல் மாகாணசபைத் தேர்தல், கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை காரணமாக அரசாங்கப் பாடசாலைகளின் தவணைக் காலங்களிலும் [illegible]றம் செய்யப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோலின் விலை நேற்றுமுன்தினம் முதல் 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி - ஒரு லீற்றர் பெற்றோலின் புதிய விலை 58 ரூபாவாகவும், சுப்பர் பெற்றோலின் விலை 60 ரூபாவாகவும் இருக்கும்.

# சுவீடன் எம்.பிக்கள் அடங்கிய குழுவினர் குடாநாட்டு நிலைமையை பார்வையிட்டனர்!

(யாழ்ப்பாணம்)

சுவீடன் நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று, நேற்று யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து இங்குள்ள தற்போதைய நிலவரம் குறித்து ஆராய்ந்தது.

ஒன்பர் பேர் அடங்கிய இந்த சுவீடன் நாட்டு பிரதிநிதிகள் குழுவினர், சமாதான முயற்சிகளை எவ்வாறு முன்னெடுப்பது?, சமாதானம் ஏற்பட்ட பின்னர் இலங்கைக்கு எவ்வாறு உதவ முடியும் ஆகிய இரு விடயங்களை அடிப்படையாகக் கொண்டே தமது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து, அங்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அரச அதிபர் உட்பட பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்திய குழுவினரில் ஒரு தொகுதியினரே நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

ஏனையோர் மட்டக்களப்பு உட்பட நாட்டின் கிழக்குப் பகுதியில் வாழும் மக்களுடனான சந்திப்பை மேற்கொள்ளும் பொருட்டு அங்கு சென்றிருந்தனர்.

யாழ்ப்பாணம் வந்திருந்த 9 பேர் அடங்கிய குழுவினர், நேற்றுக்காலை 11 மணியளவில் சுவீடன் நாட்டிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சுவீடனில் உள்ள இலங்கையர்களை திருப்பி அனுப்பாதிருக்க உதவுவோம்!

## யாழ். வந்த சுவீடன் எம்.பிக்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுவீடன் நாட்டிலுள்ள இலங்கை தமிழ் அகதிகளை தற்போது திருப்பி அனுப்பாதிருக்க உதவுவோம் என நேற்று யாழ் வந்த சுவீடன் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்தனர்.

நல்லூர்ப் பகுதியில் அமைந்துள்ள சுவீடன் நாட்டு அபிவிருத்திப் பணியகத்தில் சுவீடன் நாட்டில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களை நேற்று சந்தித்தபோது, அவர்கள் தம்மை மீளவும் சுவீடன் நாட்டிற்கு அழைக்குமாறு கோரினர்.

அவர்களிடம் பேசிய சுவீடன் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், திருப்பி அனுப்பப்பட்டபோது சுவீடனில் வைத்து வழங்கப்பட்ட நிதி உதவியைப்பெற்றுவிட்டுத் திரும்பியதால் எவரையும் மீள அழைக்கமுடியாது எனத் தெரிவித்தனர்.

இதனையடுத்து அவர்களிடம் அங்கு குழுமியிருந்தோர் சுவீடனில் உள்ள இலங்கையரை மீளவும் இலங்கைக்கு தற்போது அனுப்ப வேண்டாம் எனக் கோரினர்.

இதே கோரிக்கையை கொக்குவில் காந்தி கிராம அபிவிருத்தி நிலையத்தில் கூடிய மக்களும் முன்வைத்தனர்.

இதையடுத்தே நேற்றுமாலை குருநகரில் உள்ள 'கியுடெக்' நிறுவனத்தின் அலுவலகத்தில்வைத்து பொதுமக்களுடன் சந்திப்பொன்றை நடத்திய சுவீடன்நாட்டு நாடாளு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வீடு அல்லது வெளிச்சவீடுச் சின்னத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிடும்!

## தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பு

(கொழும்பு)

**தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையை அடுத்து, எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்திலோ அல்லது ரெலோவின் வெளிச்சவீட்டுச் சின்னத்திலோ போட்டியிடும்.**

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜாவும், ரெலோ அமைப்பின் செயலாளர் இந்திரகுமார் பிரசன்னாவும் இணைந்து தேர்தல் ஆணையாளருக்கு தெரிவித்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுத்தேர்தலை அவதானிக்க கண்காணிப்பாளருக்கு அனுமதி!

## தேர்தல் ஆணையாளர் வழங்கினார்

(கொழும்பு)

சுதந்திரமானதும், நீதியானதுமான ஜனநாயக மக்கள் தேர்தல் நடவடிக்கைக் குழு கடந்த 15 வருடங்களின் பின்னர் எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை கண்காணிக்கவுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க முதன்முறையாக தேர்தலைக் கண்காணிப்பதற்கான ஆணையை இந்தக் குழுவினருக்கு வழங்கினார்.

இந்தக் குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர், கிங்ஸ்லி றொட்றிக்கோ, தேர்தல் ஆணையாளரின் அனுமதி தொடர்பாகத் தெரிவித்தபோது,

1989 ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் எமது குழு தேர்தல் கண்காணிப்பை மேற்கொண்டது.

கடந்த 15 வருடங்களின் பின் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் நாடுதழுவிய ரீதியில் 9500 தேர்தல் நிலையங்களில் எமது குழு கண்காணிப்பை மேற்கொள்ளவுள்ளது.

தேர்தல் ஆணையாளரின் அறிவிப்பை அடுத்து, 100 சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களும் வரவழைக்கப்படவுள்ளனர். அதற்கு மேலதிகமாக உள்ளூரைச் சேர்ந்த 20 ஆயிரம் தேர்தல் கண்காணிப்பாளர்களும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# டக்ளஸ் தேவானந்தா தலைமையில் புலிகளுக்கு எதிரான கூட்டணி!

## கொழும்பில் ஆலோசனை

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் - விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒரு கூட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக தமிழ்க் கட்சிகள் ஆராய்ந்து வருவதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டது.

புலிகள் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளல்ல என்பதையும் - ஏனைய தமிழ்க் குழுக்கள் வித்தியாசமான சிந்தனையுடன் இருப்பதை உலகுக்கு எடுத்துக் காட்டும் வகையிலும் இந்தக் கூட்டணி உருவாக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஈ.பி.டி.பி, புளொட், ஈரோஸ் (சங்கர் ராஜி அணி), ஈ.பி.ஆர். எல் எவ். (வரதர் அணி) ஆகிய கட்சிகளே இந்தக் கூட்டணியை அமைபபது தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டிருக்கின்றன.

இந்தக் கூட்டணிக்கு ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தலைமை தாங்குவார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளப் புனரமைப்புச் செய்வது அரசியல் குழப்பத்தால் பாதிப்பு!

## அமெரிக்க உயர் அதிகாரி கருத்து

(கொழும்பு)

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சர்வதேச உதவிகள் மூலம் மீள அபிவிருத்தி செய்வதற்கு இங்குள்ள அரசியல் நெருக்கடி நிலை தடையாக உள்ளதென அமெரிக்க யு.எஸ்.எயிட். நிறுவனத்தின் பிரதி நிர்வாக அதிகாரி மார்க் வோட் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

நின்றுபோயுள்ள சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு பல பக்கங்களி

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
ail 8-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

## அரங்கேற்றவிழா

ஆரம்பக் கல்விச் சிறார்களுக்கு அரங்கேற்றப் போட்டி விழா வலய மட்ட ரீதியாக நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. இதன் முதற்கட்ட நிகழ்வாக அனைத்து பாடசாலைகளி லும் உள்ள தரம் 1 முதல் 5 வரை யான ஆரம்பக்கல்விச் சிறார்க ளுக்கு போட்டிகள் நடைபெற்று, தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பாடசாலை ரீதியாக சிறார் அரங் கேற்ற போட்டியில் பங்குபற்றி வெற் றியீட்டுபவர்கள் தெரிவுசெய்யப்பட்டு ஓகஸ்ட் மாதம் வலயரீதியாக அரங் கேற்றப் போட்டிகள் நடத்தப்படவுள் ளன. இதற்கமைய அனைத்துப் பாட சாலைகளும் பங்குபற்ற வேண்டும் என யாழ்.வலயக் கல்விப்பணிப் பாளர் கேட்டுள்ளார்.

## ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் அம்பலவாணர் கலை யரங்கத்தின் நான்காமாண்டு நினைவு தின ஆண்டுவிழா வைபவங்கள் எதிர் வரும் 21 ஆம் திகதி நடை பெறவுள்ளன. இணுவில் காரைக்கால பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் பொதுமக்களால் முன்னெ டுக்கப்படும் இந்த ஆண்டுவிழாவில் கலை நிகழ்வுகள் பல இடம்பெற வுள்ளன.

வயலின் கச்சேரிகள், பண்ணிசை நிகழ்வுகள், சிறப்புச் சொற்பொழிவு கள், நடனநிகழ்வுகள் என்பவற்று டன் அம்பலவாணர் கலையரங்கத்தி னரின் செந்தாமரை எனும் வரலாற்று நாடகமும் மேடையேறவுள்ளது. (94)

## வகுப்புகள் பிற்போடப்பட்டுள்ளன

இராமநாதன் நுண்கலைப்பீட புகு முக மாணவர்களுக்கான ஆரம்ப வகுப்புகள் பிற்போடப்பட்டுள்ளன.

மேற்படி புகுமுக மாணவர்களுக் கான வகுப்பு நாளை மறுதினம் ஆரம் பமாக இருந்தது. இந்த வகுப்புகள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகு மென யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட உதவிப்பதிவாளர் தெரிவித்தார்.

## வீடு தீப்பற்றிய குடும்பத்திற்கு உதவிப் பொருள் கொடுப்பனவு

சிறுப்பிட்டியில் இரண்டு வாரங் களுக்கு முன்பு வீடு தீப்பற்றிய குடும்பத்திற்கு அவர்களின் நலன் கருதி சீருடைகள், ஆடைகள், பாட சாலை உபகரணங்கள் என்பன நீர் வேலி அரசியற்துறைப் பொறுப்பாள ரினால் கோப்பாய் தேசிய எழுச்சிப் பேரவை அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி அதிகாலை 5 மணியளவில் பொ. லோகநாதன் என்பவரின் வீடு எதிர் பாராதவிதமாகத் தீப்பற்றியதில் வீட்டி லிருந்த உடமைகள் முற்றாக எரிந் தன. இதனால், அந்தக் குடும்பத் தில் உள்ள பிள்ளைகளின் நலன் கருதி ஜனசக்தி சிறுவர் கழகமும், கோப்பாய் பிரதேச சிறுவர் ஊக்கு விப்பு கழகமும் கோப்பாய் பிரதேச எழுச்சிப் பேரவையும் இணைந்தே இந்தக் குடும்பத்தின் நலன்கருதி இந்தப் பொருட்களை வழங்கினர்.


**வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம்**

**யாழ்.மாவட்டம்**

## பதவி வெற்றிடங்கள்

யாழ்.மாவட்டத்தில் 'யுனிசெப்' அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொள்ளும் மிதிவெடி அபாயக் கல்வித்திட்டத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெளிக்கள உத்தியோகத்தர் (Field officers)

வெற்றிடம்: தென்மராட்சி - 03
வலிகாமம் - 03

வேதனம்: மாதாந்தம் ரூபா 6000.00

தகைமைகள்: G.C.E.A/L சித்தி

மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் உள்ளோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

குறிப்பு:

தென்மராட்சிப் பிரதேசத்திற்கு விண்ணப்பிப்போர் சாவகச்சேரிப் பிரதேசத் திற்கு அண்மையில் வசிப்பவராகவும், வலிகாமப் பிரதேசத்திற்கு விண்ணப் பிப்போர் உடுவில் பிரதேசத்திற்கு அண்மையில் வசிப்பவராகவும், இருத்தல் விரும்பத்தக்கது. விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களுடன் முழு மையாகப் பூர்த்திசெய்யப்பட்ட சுயவிவரக் கோவையையும் 21.02.04 அன்றோ அல்லது அதற்கு முன்போ கீழ்க் குறிப்பிட்ட முகவரியில் கிடைக் கும் வண்ணம் அனுப்பிவைக்கவும். நேரிலும் சமர்ப்பிக்கலாம்.

தலைவர்

**வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம்**

இல. 63, பலாலி வீதி,
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021-222-5932 (சி-2218)

**யசோ இறபர் ஸ்டாம்**

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 1இல் இருந்து 11 வரை எல் லாப் பாடங்களும்,
GRAMMAR, SPOKEN ENGLISH மேற் படிப்பு வரை
பதிவுக்கு:- அதிபர்
426(302), K.K.S வீதி,
யாழ்ப்பாணம். (588)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த
**ஜெய்**
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30 (பு.நே)
18 ஆம் திகதியிலிருந்து
**எங்கள் அண்ணா**
(சி-2197)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந்த், சாக்ஷி நடித்த
**வாஞ்சிநாதன்**
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
**X-MEN ii**
(சி-2196)

**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY VADDUKODDAI**

கீழ்வரும் பயிற்சி நெறிகள் எமது நிறுவனத்தில் பங்குனி 2004 முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளன. ஆண்டு 10 வரை படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**Certificate Craft Courses** (தமிழ் மொழி மூலம்)

- Mechanical Craftsman practice. (லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சி)
- Electrical Wiring & Installation practice. (மின் இணைப்பும் நிர்மாணமும்)
- Automobile Technology. (மோட்டார் வாகன தொழில்நுட்பம்)
- Radio & T.v Servicing. (ரேடியோ ரீவி பழுதுபார்த்தல்)
- Foundry Practice. (உலோக வார்ப்பு தொழிற்பயிற்சி)
- Air - Conditioning & Refrigeration. (குளிரூட்டுதல் பயிற்சி)

காலம்: 1 வருடம்

Facilities: LIBRARY, HOSTEL, SPORTS
FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT:-

DIRECTOR
Jaffna College Institute of Technology
Vaddukoddai

Email : jcit@sltnet.lk Tel. No : 0602213139 (சி/2220)

# அழகும், கலைத்துவமும் மிக்க நவீன முறையிலான நம்பகமான இடம்

# சுரபி பதிப்பகம்

பத்திரிகைகள், விழா மலர்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள், பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள் மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 5107

# புனர்வாழ்வு அமைச்சை ஜனாதிபதி பறித்ததால் எட்டு லட்சம் அகதிகள் பாதிப்படைந்துள்ளனர்!

## முன்னாள் அமைச்சர் ஜயலத் தெரிவிப்பு

புனர்வாழ்வு, மீள்குடியமர்த்துகை அகதிகள் விவகார அமைச்சர் பதவியை, ஜனாதிபதி மீளப்பெற்றமையால், வடக்கு - கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் 8 லட்சம் அகதிகளின் வாழ்வு கேள்விக்குறியாகியுள்ளது என, முன்னாள் அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதியால் 39 அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்டமையால், அமைச்சராக இருந்த ஜயலத்தின் பதவியும் நீக்கப்பட்டுள்ளது. இது குறித்து அவர் விடுத்த செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

புனரமைப்பு மீள்குடியமர்த்துகை மற்றும் அகதிகள் விவகார அமைச்சை, ஜனாதிபதி தனது பொறுப்பிற்குள் கொண்டுவந்துள்ளார். இந்த அமைச்சு ஏனைய அமைச்சுக்களுடன் ஒப்பிடும்போது அதிமுக்கியம் வாய்ந்ததாகும்.

அதாவது, 8 லட்சம் அகதிகளின் தேவைகளும் இந்த அமைச்சின்மூலமே நிறைவேற்றப்படுகின்றன. மற்றும் ஓமந்தை, முகமாலை சோதனைச்சாவடிகளும் இதன் அனுசரணையிலேயே செயற்படுகின்றன. மேலும் மிதிவெடிகள் அகற்றப்படுதல், அகதிகளுக்கு நிவாரண உதவிகள் போன்ற எண்ணற்ற தேவைகள் இந்த அமைச்சின் தலையீட்டிலேயே நிறைவேற்றப்படுகின்றன.

வன்னியில் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட விசேட வேலைத்திட்டங்களும் இந்த அமைச்சின்மூலமே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளைச் செய்து முடிப்பதும் இந்த அமைச்சின் பொறுப்பே. இப்படிப் பல்வேறு பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற இந்த அமைச்சை, ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததால், இந்த அனைத்து பணிகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. அவசர முடிவுகள் எடுக்கவும், தலைமை வகிக்கவும் அமைச்சர் ஒருவர் அவசியம்.

இதனால், ஏப்ரல் 2 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெற்று, அமைச்சர் ஒருவர் தெரிவாகும் வரை வடக்கு - கிழக்கு அகதிகள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்படலாம்.

இந்த அமைச்சுப் பொறுப்பிலிருந்து என்னை நீக்கியதால், எனக்கு எந்தவித கவலையும் இல்லை. எனது கவலையெல்லாம் 2 வருடங்களாக நான் சேவை புரிந்துவந்த வடக்கு அகதிகளைப் பற்றியதுதான். எப்படியாயினும், நான் அன்றுபோல் இன்றும், இன்று போல் என்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உதவி செய்வதில் என்னை அர்ப்பணிக்கத் தயாராக உள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

# மோசடிகளுக்கு மத்தியிலும் கடந்த தேர்தலில் வென்றோம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கடந்த பொதுத்தேர்தலில் பல மோசடிகளுக்கு மத்தியிலும் - பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி ஆகியவற்றைவிட ஐக்கிய தேசிய முன்னணி அதிக வாக்குகளைப் பெற்றதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் பிரதி அமைச்சரான அத்துல நிமலசிறி ஜயசிங்க - நேற்றுமுன்தினம் காலை சிறிகோத்தாவில் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டபோது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் வன்முறைகள் இடம்பெற்றிக்காவிடின், ஐக்கிய தேசிய முன்னணி பாரிய வெற்றிகளைப் பெற்றிருக்கும். இந்த உண்மை பொதுத்தேர்தல் நடைபெற்ற பின் நடந்த உள்ளூராட்சித்தேர்தலில் உறுதிப்படுத்தப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி ஆகியவை இணைந்து ஏற்படுத்திக் கொண்ட கூட்டமைப்பு, அபிவிருத்திக்கான நாட்டின் பயணத்தை நிறுத்திக்கொண்டதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# அமைச்சர்களுக்கு எதிராக லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு!

## மகிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர்களுக்கு எதிராக லஞ்ச ஊழல் தொடர்பான முறைப்பாட் [illegible] செய்யப்போவதாக, பொது ஜ[illegible] ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இன்று, இதுதொடர்பான முறைப்பாட்டை, தான் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். 15 அமைச்சர்கள்மீது அவர் இந்த குற்றச்சாட்டை சமர்ப்பிக்கவுள்ளார்.

நிதிக் குற்றச்சாட்டுக்கள், லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளில் இவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும், இந்த அடிப்படையில் குற்றச்சாட்டு தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டாலும்கூட, உரியமுறையில் விசாரணை நடக்குமா என்பது தொடர்பான சந்தேகத்தை மகிந்தானந்த அளுத்கமகே வெளியிட்டார். (01)

# அமைச்சர்களின் பதவிநீக்கம் சமாதான முயற்சியை பாதிக்காது

## பிரதமரின் குற்றச்சாட்டை ஜனாதிபதி நிராகரிப்பு

(கொழும்பு)


வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்கு உறுதுணையாக இருக்கும் 3 அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி நீக்கியமையினால், சமாதான நடவடிக்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்ற பிரதமரின் குற்றச்சாட்டுக்களை, ஜனாதிபதி செயலகம் முழுமையாக நிராகரித்துள்ளது.

பிரதமர் ரணில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்துக்கு பதில் அளிக்கும் வகையில் ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையிலேயே இந்த மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

கடந்த நவம்பர் மாதம் நான்காம் திகதி ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமையினால், யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. இதனை இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலைவர்கூட ஏற்றுக் கொண்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள், தாம் சமாதான நடவடிக்கையில் இருந்து பின்வாங்குவதாக அறிவித்த பின்னர்தான், சமாதான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. இப்போது அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்டமைமூலம்தான், சமாதான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பது, எந்தவிதத்திலும் நியாயமாகாது.



அமைச்சரவை அந்தஸ்து அற்ற இந்துசமய அலுவல்கள் அமைச்சு, வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு, புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சு முதலிய அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி நீக்கியதன்மூலம், நாட்டின் சமாதான முயற்சிகள் பாதிப்படையும் எனத் தெரிவிப்பது எந்தவிதத்திலும் நியாயமாகாது எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது இன்னொரு யுத்தத்துக்கான அழைப்பு

## புஞ்யசார தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

பெரும்பான்மைப் பலத்துடன் [illegible]ங்கிய நாடாளுமன்றத்தைக் கலைத்தமை, முறையற்றதொரு நடவடிக்கையென, இலங்கையின் நீதிக்கும், சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் போஷகரும், ஏழு கோறளைகளின் தர்மநிலையத் தலைவருமான வண. மஹகல்கடவல புஞ்யசார தேரர் தெரிவித்தார்.

20 வருடகால யுத்தம் ஓய்ந்த நிலையில், கடந்த இரு வருடங்களாக இலங்கையில் சமாதானத்தின் ஒளிக்கீற்றுகள் தென்பட்ட இந்த நிலையில், நாடாளுமன்றக் கலைப்பானது மீண்டும் ஒரு யுத்தத்திற்கான அழைப்பு என்ற ஐயம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்போது, அனைவரும் தங்கள் பூரண ஒத்துழைப்பை நல்கவேண்டும்.

ஆனால், தேசப்பற்றுள்ளவர்கள் எனக் கூறிக் கொள்ளும் சிலர் - சமாதான முயற்சி களைக் குழப்பி, நாட்டை நாசம்செய்ய முனைகின்றனர். இப்படிப் பட்டவர்கள் நாட்டுக்கு சாபக்கேடு.

இன்று அரசியலில் ஈடுபடுபவர்கள் நாட்டின் நிலைபற்றி நோக்காது, அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதிலேயே குறியாக உள்ளனர். இந்த நிலை தொடருமானால், இலங்கையின் அவிபிருத்தி என்பது வெறும் பகற்கனவாகவே அமையும்.

நீண்டகால இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கில், தமிழீழ விடுதலைப் புலிகள் - தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு எதிர்கால இலங்கையின் நலன்கருதி தங்கள் ஆலோசனைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த சூழ்நிலையில், இலங்கை அரசியலில் விரும்பத்தகாத சில நிகழ்வுகள் இடம்பெற்றமை கவலைக்குரிய விடயமாகும் எனவும் அவர் கூறினார்.



**யாழ்.போதான வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு- ஆரம்பநிலை விபத்துப் பராமரிப்புப் பற்றிய பயிற்சிகள் வெளிநாட்டிலிருந்து வருகைதந்த மருத்துவ நிபுணர்களால் வழங்கப்படுவதைக் காணலாம்.**

## படையினரின் கட்டுப்பாடற்ற பகுதிகளில்

# தேர்தல் நடத்துவது தொடர்பாக முப்படைத் தளபதிகளுடன் பேச்சு

வடக்கு - கிழக்கு பகுதியிலுள்ள படையினரின் கட்டுப்பாடற்ற பகுதிகளில் - பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பாக, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க முப்படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

நாளைமறுதினம் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில், வடக்கு-கிழக்கில் உள்ள பகுதிகளினதும், எல்லைப் பகுதிகளினதும் பாதுகாப்புக் குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு வாக்களிப்பில் கலந்துகொள்ளப் போகிறார்கள் என்பது குறித்தும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் - யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள பல இலட்சம் வாக்காளர்கள் ஒரே தினத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லவேண்டும் என்பதனால், சோதனை நிலையங்களில் கெடுபிடிகளைத் தளர்த்துவது குறித்தும் இங்கு ஆராயப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, நாளைமறுதினம் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பு முன்னதாக இன்று வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த அரச அதிபர்கள் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்களைச் சந்தித்து, தேர்தல் ஆணையாளர் பேசவுள்ளதாகவும் தெரியவருகிறது.

### யு.எஸ்.எயிட் பிரதிநிதிகள் குடாநாட்டுக்கு விஜயம

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் ஸ்தாபனத்தின், (யு.எஸ்.எயிட்) ஆசிய கிழக்குப் பிரிவின் பிரதிநிதி மாக்கஸ்வோக் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம செய்தார்.

இவர் யு.எஸ்.எயிட்டினால் யாழ். மாவட்ட மக்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்குறித்து ஆராய்ந்தார். மேலும், அங்கவீனர்கள் ஜெய்ப்பூர் நிலையத்துக்குச் சென்று, அதன் செயற்பாடுகள் தொடர்பாகக் கேட்டறிந்தனர்.

காரைநகர்ப் பகுதிக்குச் சென்று மீனவர் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்ததுடன், யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரிக்குச் சென்று பாடசாலைகளின் நிலை தொடர்பாகவும் ஆராய்ந்து, மூன்று அறைகளைப் புனரமைத்துத் தருவதாகவும் அவர் உறுதியளித்தார்.

# நாடாளுமன்றக் கலைப்பினால் தாய்லாந்துடனான ஒப்பந்தம் ரத்து

ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்து அரசியல் நிலையை மாற்றியமைத்தமையால், தாய்லாந்துக்கும் - இலங்கைக்குமிடையில் செய்து கொள்ளவிருந்த இருபக்க வர்த்தக ஒப்பந்தத்தினை தற்போது செய்யமுடியாது என அந்த நாடு ஆதங்கம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமையால், தற்போது நாட்டில் நிலையான அரசாங்கம் இல்லை. இந்த நிலையில் தற்போதுள்ள காபந்து அரசுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கு தாய்லாந்து விரும்பாமையினாலேயே மறுப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நிலையான அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்ட பின்னர், அந்த அரசாங்கத்துடன் ஒப்பந்தத்தினை செய்யமுடியுமெனவும், தாய்லாந்து அரசு தெரிவித்துள்ளது என தெரியவருகிறது. (01)

# தென்னாபிரிக்கா 5 விக்கெட்டுக்களால் நியூஸிலாந்து அணியை வென்றது



தென்னாபிரிக்காவிற்கும் நியூஸிலாந்துக்கும் இடையே நடைபெற்ற சர்வதேச ஒருநாள் போட்டியில், தென்னாபிரிக்கா அணி 5 விக்கெட்டுக்களால் நியூஸிலாந்து அணியை வென்றுள்ளது.

ஒக்லாண்டில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஐம்பது ஓவர்கள் முடிவில் நியூஸிலாந்து அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

நியூஸிலாந்து அணியின் சார்பில் ஸ்ரைஸ் (60), கிறிஸ் கெயின்ஸ் (58) ஆகியோர் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். விட்ரோரி, பிளெமிங் ஆகியோர் ரன் அவுட்டாகினர். பிளெமிங் 35 பந்துகளில் 30 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

பந்து வீச்சில் என்ரினி, நெல், குளூஸ்னர் ஆகியோர் சிறப்பாகப் பந்துவீசி நியூஸிலாந்து அணியின் விக்கெட்டுக்களை ஒவ்வொருவரும் தலா இரண்டு என்ற அடிப்படையில் வீழ்த்தினர்.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி, 49.4 ஓவரில் இரண்டு பந்துகள் மீதமிருக்கையில் தனது வெற்றி இலக்கை அடைந்தது.

தென்னாபிரிக்கா அணி சார்பில் அணித்தலைவர் ஸிமித் 91 பந்துகளில் 72 ஓட்டங்களையும், கிப்ஸ் 57 பந்துகளில் 43 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். டிப்பென்னர் ஆட்டமிழக்காமல் 49 பந்துகளில் 44 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

வெற்றி பெறுவதற்கான ஓட்டத்தை கடைசி ஓவரில் பொலக் அடித்தாடிப்பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணியினர் தென்னாபிரிக்காவிற்கு சவாலாகவே இருந்துள்ளனர். டானியல் விக்ரோரி 2 விக்கெட்டுக்களையும், ஸ்ரைஸ், கெயின்ஸ், ர.்.பி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர்.

இறுதியில் 5 விக்கெட்டுக்களை இழந்து தென்னாபிரிக்கா தனது வெற்றி இலக்கை அடைந்தது.



தென்னாபிரிக்கா அணிக்கும், நியூஸிலாந்து அணிக்கும், இடையே ஐந்து ஒருநாள் போட்டிகள் நடைபெறத்திட்டமிடப்பட்டிருக்கின்றது.

இந்த வரிசையில் நடைபெற்ற முதல் போட்டியிலேயே - தென்னாபிரிக்க வெற்றிபெற்றுள்ளது. ஏற்கனவே மேற்கிந்தியதீவுகள் அணிக்கு எதிரான ஒரு நாள் போட்டித் தொடரில் தென்னாபிரிக்கா அணி 3:1 என்ற அடிப்படையில் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேற்கிந்தியச் சுற்றுலாவுக்கு இங்கிலாந்து அணி!

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்தமாதம் மேற்கிந்தியத்தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்ட் மற்றும் 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. அடுத்த மாதம் 11 ஆம் திகதி டெஸ்ட் போட்டித் தொடர் தொடங்குகிறது. இங்கிலாந்து அணியின் மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயண விபரம் வருமாறு

மார்ச் 11-15 முதல் டெஸ்ட் (ஜமைக்கா), மார்ச் 19-23 இரண்டாவது டெஸட் (டிரினிடட்), ஏப்ரல் 1-5 மூன்றாவது டெஸ்ட் (பார்படோஸ்), ஏப்ரல் 10-14 கடைசி டெஸ்ட் (அன்டிகுவா).

ஏப்ரல் 18 முதல் ஒருநாள் போட்டி (கயானா), ஏப்ரல் 24-2ஆவது ஒருநாள் போட்டி (டிரினிடட்), ஏப்ரல் 25-3 ஆவது ஒருநாள் போட்டி (டிரினிடட்), ஏப்ரல் 28-4 ஆவது ஒருநாள் போட்டி (செயிண்ட் ஜோர்ஜ்), மே1-5ஆவது ஒருநாள் போட்டி (செயிண்ட் லூசிகா) , மே 2 - 6ஆவது ஒருநாள் போட்டி (செயிணட் லூசிகா) மே 5 -7ஆவது ஒருநாள் போட்டி (பார்படோஸ்).

# சிறந்த அவுஸ்ரேலிய வீரராக ரிக்கி பொண்டிங் தெரிவு



கடந்த ஆண்டின் சிறந்த அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரராக ரிக்கி பொண்டிங் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு அலன் போடேர் விருது வழங்கப்படவுள்ளது. பொண்டிங் தலைமையில் கடந்த ஆண்டு அவுஸ்ரேலிய அணி உலக கிண்ணத்தை கைப்பற்றியது. உலக கிண்ணப் போட்டியில் அவரது ஆட்டம் மிகவும் அபாரமாக இருந்தது. அத்துடன், டெஸ்ட் போட்டிகளில மூன்று இரட்டைச்சதம் அடித்து இருந்தார்.

பொண்டிங் 139 வாக்குகள் பெற்று சிறந்த வீரரானார். ஹைடனுக்கு 91 வாக்குகளும், கில்கிறிஸ்ட்டுக்கு 71 வாக்குகளும் கிடைத்தது. இலங்கை சுற்றுப்பயணத்திலிருந்து, டெஸ்ட் அணிக்கும் அவர் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு

# கொலம்பிய கால்பந்து வீரர் சுட்டுக்கொல்லப்பட்டார்

கொலம்பிய நாட்டைச் சேர்ந்த முன்னாள் சர்வதேச கால்பந்து வீரர் அல்பெரியோ யூதரியாகா தனது நண்பர்களுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத மர்மமனிதனொருவர் கைத்துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார்.

எதற்காக அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது தெரியவில்லை. யூதரியாகா 1990 ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டிக்கு கொலம்பியா தகுதி பெறக்காரணமாக இருந்தார்.

கொலம்பியாவைச் சேர்ந்த எஸ்கோபர் என்ற வீரர் உலகக் கோப்பையில் சேம் சைட் கோல் அடித்ததற்காக கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலய இல்ல மெய்வன்மைத் தேர்வு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை பி.ப 1.30 மணிக்கு கலைவாணி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கோட்ட கல்வி அதிகாரி எஸ். எஸ்.தங்கராஜா கலந்து கொள்வார்.

★ ★ ★

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, இன்று சனிக் கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் 1 மணிக்கு ஆரம்ப மாகி இந்தப் போட்டிகள் நடைபெறும். (110)

# இந்தியா - பாகிஸ்தான் போட்டியை இலங்கையில் நடத்த முடிவு!

## பாகிஸ்தான் ஆலோசனை

இந்திய கிரிக்கெட் அணி -அடுத்த மாதம் பாகிஸ்தானிற்கு சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகளில் விளையாட திட்டமிட்டிருந்தது.

நாடாளுமன்ற தேர்தல் நடைபெற இருப்பதாலும், வீரர்களுக்கு பாதுகாப்பு குறைவாக இருப்பதாலும் இந்திய அணி பாகிஸ்தான் பயணத்தை தள்ளிவைக்க வேண்டும் என்று, இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் விரும்புகிறது. இது குறித்து தங்களுக்கு அதிகார பூர்வமாக எந்த தகவலும் வரவில்லை என்று இந்திய கிரிக்கெட்சபை தெரிவித்தது.

இந்த நிலையில் இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போட்டியை இலங்கையில் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விரும்புகிறது. இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபைக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அந்நாடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட்சபைத் தலைவர் சாரியர் கான் கூறும்போது, பாதுகாப்பு குறித்து அச்சம் தெரிவிப்பதால் இந்தியா - பாகிஸ்தான் போட்டியை இலங்கையில் நடத்தலாம் என்றார்.

இதற்கிடையே இந்தியா - பாகிஸ்தான் போட்டி தள்ளிப் போவதை பாகிஸ்தான் அதிபர் முஷாரப் விரும்பவில்லை. இது தொடர்பாக இந்திய பிரதமர் வாஜ்பாயுடன் தொலைபேசியில் பேசவும் முடிவு செய்துள்ளார். இரண்டொரு தினங்களில் இவர் பேசலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணியின் பாகிஸ்தான் பயணம் இதுவரை அதிகாரபூர்வமாக தள்ளிவைக்கப்படவில்லை. சுற்றுப்பயணம் தள்ளிவைக்கப்பட்டால் பாகிஸ்தானுக்கு கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்படும். இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட்சபை ஏற்கனவே நிர்ணயித்த மாதத்தில் இந்தியாவுடனான போட்டியை நடத்த உறுதியாக உள்ளது.

### தெல்லிப்பழை தடகள விளையாட்டுப் போட்டி

தெல்லிப்பழை பிரதேசசெயலக வருடாந்த தடகளப் போட்டி நாளை பி.ப 1.30 மணிக்கு - மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்கு பிரதேச செயலர் க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

# சென்னையில் வைகோவை ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சந்திப்பு

(சென்னை)

ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோவை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் நேற்று அதிகாலை சந்தித்தார்.

அந்தமான் தலைநகரான போர்ட் பிளேயர் செல்வதற்காக நேற்று அதிகாலை 1.45 க்கு பெர்ணான்டஸ் சென்னை வந்தார். விமான நிலையத்திலிருந்து வைகோவின் இல்லத்துக்குச் சென்று அவரைச் சந்தித்தார்.

அப்போது உணர்ச்சிப் பெருக்கில் தலைவர்கள் இருவரும் ஒருவரையொருவர் கட்டியணைத்துக் கொண்டனர். வைகோ பெர்னாண்டஸுக்கு சால்வை போர்த்தினார். வைகோவின் உடல் நலம் குறித்து பெர்னாண்டஸ விசாரித்தார். பிணையில் விடுதலையானதற்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

இருவரும் சுமார் இரண்டு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தனர். பின்னர் 5.30 மணிக்கு பெர்னாண்டஸ் போர்ட் பிளேயர் புறப்பட்டுச் சென்றார். வைகோ சிறையிலிருந்து விடுதலையானதும் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஜோர்ஜ் பெர்னாணடஸ் வாழ்த்துத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் மக்களவைக்கு தேர்தலில் ம.தி.மு.க சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அந்தக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ இன்று அறிவிக்கவுள்ளார்.

ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் ம.தி.மு.கவுக்கு சிவகாசி, வந்தவாசி, திருச்சி, பொள்ளாச்சி, ஆகிய தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தத் தொகுதிகளில் போட்டியிட விரும்புபவர்கள் கடந்த 9, 10 ஆம் திகதிகளில் தங்களது மனுக்களை தாக்கல் செய்தனர்.

வைகோ தலைமையில் வேட்பாளர் நேர்காணல் 11,12 திகதிகளில் நடந்தது. இந்தநிலையில் ம.தி.மு.க அவைத்தலைவர் எல். கணேசன் நிருபர்களிடம் கூறியதாவது,

இன்று கட்சியின் செயற்குழு பொதுக்குழுக் கூட்டம் நடைபெறுகிறது. இதில் புதிய நிர்வாகிகளை வைகோ அறிவிப்பார். அப்போது வேட்பாளர்களின் பெயர்கள் ஒப்புதல் பெறப்படுகிறது. அதன் பின்னர் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

19ஆம் திகதி அண்ணா நகரில் கட்சியின் நிதியளிப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு வைகோ பேசுவார். 28 ஆம் திகதி அவரது சொந்த ஊரான கலிங்கப்பட்டி செல்கிறார். தேர்தல் பிரசார பயணத் திட்டம் குறித்து தி.மு.க தலைவர் கருணாநிதியுடன் கலந்துபேசி முடிவு செய்யப்படும் என்றார்.


வேட்பாளர் நேர்காணல் நடைபெறுகிறது, என்றாலும் எந்தெந்த தொகுதிகளில் யார்யார் போட்டியிடுவது எனபது ஏறத்தாழ முடிவாகிவிட்டது என்று ம.தி.மு.க வட்டாரங்கள் தெரிவித்தன.

சிவகாசியில் வைகோவும், திருச்சியில் எல்.கணேசனும், போட்டியிடுவார்கள் என்றும், வந்தவாசியில்முன்னாள் மத்தியஅமைச்சர் செஞ்சி ராமச்சந்திரனும் பொள்ளாச்சித் தொகுதியில் டாக்டர் கிருஷ்ணனும் நிறுத்தப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

இதனால், முன்னாள் அமைச்சரும், ம.தி.மு.க பொருளாளருமான கண்ணப்பனுக்கு இந்தமுறை போட்டியிட வாய்ப்பிருக்காது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இப்போதைக்கு அரசியல் இல்லை விஜயகாந் குத்துக்கரணம்

(திருச்சி)



உடனடியாக அரசியலில் குதிக்கும் எண்ணம் இல்லை, ரசிகர்களுடன் விரிவான ஆலோசனை நடத்திய பிறகே அது குறித்து முடிவு எடுக்கப்படும் என்று நடிகர் விஜயகாந் தெரிவித்தார்.

விஜயகாந அடிக்கடி, தான் அரசியலில் குதிக்கப் போவதாக கூறி வருகிறார்.

இந்தநிலையில் நேற்று முன் தினம் திருச்சியில் பி.டி.ஐ. செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் தான் தனிக்கட்சி தொடங்கப் போவதாகவும், ஜாதி, மத பேதமற்ற வகையில் அது இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனால், விஜயகாந் ரசிகர்களிடையே உற்சாக வெள்ளம் கரைபுரண்டோடியது. சென்னை நகரில் பல இடங்களில் விஜயகாந் ரசிகர்கள் பட்டாசு கொளுத்திக் கொண்டாடினர்.

ஆனால், விஜயகாந் நேற்று முன்தினம் இரவு செய்தியாளர்களைச் சந்தித்து இப்போதைக்கு உடனடியாக அரசியலில் குதிக்கும் எண்ணம் இல்லை என்று தெரிவித்து ரசிகர்களின் எதிர்பார்ப்பை புஷ்வாணமாக்கிவிட்டார்.

செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் -

உடனடியாக அரசியலில் குதிக்கும் எண்ணம் என்னிடம் இல்லை.

ரசிகர்களுடன் விரிவாகப் பேசி, பல்வேறு ஆய்வுகள் நடத்தி அதன் பிறகே ஒரு முடிவுக்கு வருவேன்.

எனது ரசிகர்கள் என்னை தீவிர அரசியலில் ஈடுபடுமாறு நீண்ட காலமாகவே அழைத்து வருகிறார்கள்.

இருப்பினும், இப்போதைக்கு அரசியலில் நுழையும் எண்ணம் எனக்கு இல்லை. அந்த முடிவை எடுக்க எனக்கு நிறைய காலஅவகாசம் தேவைப்படுகிறது.

அதேசமயம், தேவைப்பட்டால் அப்படிப்பட்ட நிலைமை உருவானால் கட்சி ஆரம்பித்து அரசியலில் தீவிரமாக ஈடுபடவும் நான் தயங்கமாட்டேன் என்று கூறினார்.

# ஊகங்கள் வெற்றியல்ல...



உயரமாக மரங்கள் வளர்ந்த அடர்த்தியான காடு. அங்கே ஏமாந்தாற்போல் உலாவிக்கொண்டிருந்த பூனையை ஒரு சிங்கம் கௌவிப் பிடித்துவிட்டது. விழிப்படைந்த பூனை 'ஐயையோ, என்னைச் சாப்பிட்டால், உடனேயே இறந்து போய்விடுவாய்' எனப் பயம்காட்டியது. 'உன்னைத் தின்றால், நான் ஏன் சாக வேண்டும்?' என்று கேட்டது சிங்கம். 'உங்களுக்குத் தெரியாதலல்லவா? நேற்றிரவு நம் காட்டுக்குக் கடவுள் வந்தார். அவர் வந்து நம் காட்டு விலங்குகளுக்கெல்லாம் விநோதமான சக்தியை வழங்கினார். இந்தக் காட்டுக்குள் உள்ள எந்த மிருகத்தைத் தின்றாலும், நீங்கள் உடனேயே இறந்து போய்விடுவீர்கள். வேண்டுமானால் இன்று சாயங்காலம் அதை நிரூபிக்கிறேன்' என்றது பூனை. 'அப்படி நிரூபிக்கவில்லை என்றால், காட்டில் ஒரு பூனைகூட வாழமுடியாது. உங்கள் வம்சத்தையே துவசம்செய்து விடுவேன்' என்று கர்ஜித்தது சிங்கம்.

போகிற வழியில் பூனை ஓர் ஓணானைப் பார்த்தது. ஓணானிடம் இதோ பார் சாயங்காலம் நான் சிங்கத்தை அழைத்துவரப் போகிறேன். அப்படி வரும்போது, நீ குண்டுமணிகளின்மீது உட்கார்ந்து, பின் எழுந்து போகவேண்டும்.' என்று கேட்டுக்கொண்டது. ஓணானும் ஒப்புக்கொண்டது.



பின்னர் முயலையும், அணிலையும் தேடிப்பிடித்தது. பூனை சொன்னபடி, அணில் கொவ்வைக் கொடியினிகிழ்ப் பாகத்தில் கொறித்தது. முயல் குழி பறித்து, அந்தக் கொவ்வைத் தண்டை மூடியது. இப்பொழுது கொவ்வைக்கொடி பார்ப்பதற்கு முழுமையாக இருந்தாலும், வேர் இல்லாமல் இருந்தது. பிறகு பூனை பாம்பைத் தேடிச்சென்றது. பாம்பு 'நான் எந்த விதத்தில் உனக்கு உதவமுடியும்' என்று கேட்டது. பூனை தன் திட்டத்தைக் கூறியது -

"உன்னருகே கோழிக்குஞ்சொன்றை வைத்துவிடுவேன். பாம்பு ஒன்று கோழிக் குஞ்சைப் பொரித்துள்ளது என்று சொல்வேன்" என்று கூறியது.

சாயங்காலம் பூனை - சிங்கத்தைப் பார்க்கப் போனவுடன், "நான் இங்கிருந்தபடியே ஒரு கொவ்வைக்கொடியைக் காயவைக்கப் போகிறேன்" என்று கூறியவாறு, கண்களைமூடி ஒரு நிமிடம் தியானித்தது.

சிங்கம் 'சரி... சரி...வா. அதிசயங்களையும், விநோதங்களையும் காட்டு' எனக் கட்டளையிட்டதும், இரண்டும் கூடி உலாவக்குப் புறப்பட்டன. முதலில் பூனை - சிங்கத்தை ஓணானின் அருகில் கூட்டிச்சென்றது. 'ஓணான் - கறுப்பு, சிவப்பு நிறத்தில் முட்டையிடுவதை உனக்குக் காட்டுகின்றேன்.' என்றது பூனை.

சிங்கமும், பூனையும் அருகில் சென்றதும், ஓணான் குண்டுமணிகளின் மேலிருந்து நகர்ந்தது. சிங்கம் அதைப் பார்த்து 'ஆமாம்' எனப் பசியோடும், வியப்போடும் முனகியது. அடுத்துப் பூனை - சிங்கத்தைக் கொவ்வைக்கொடி அருகில் அழைத்துச்சென்றது. 'இதுதான் நான் காயவைத்த கொடி' என்று கூறியது. கொடி வாடிப்போய்க்கிடந்தது.

ஒரு பாம்பு - கோழிக் குஞ்சைப் பெற்றெடுத்திருக்கிறது தெரியுமா?' என வினவியபடி, பூனை - சிங்கத்தைப் பாம்புப் புற்றருகே கூட்டிக்கொண்டுபோனது. புற்றை நெருங்கியதும் - பாம்பு மட்டும் பெருமூச்சு விட்டவாறு கிடந்ததைக் கண்டன.

'பூனை உடனே கோழிக்குஞ்சு எங்கே' என வினவியது. அதற்கு பாம்பு - ' நான் அதைத் தின்றுவிட்டேன். நீ கொண்டுவந்து தந்ததற்கு நன்றி' எனக் கூறி, உடலை முறுக்கியது.

சிங்கம் ஒரு விநாடியில் எல்லாவற்றையும் ஊகித்துக் கொண்டு, கோபத்துடன் பூனைமீது பாய்ந்தது. பூனை சடாரென அருகிலிருந்த மரத்தின்மீது பாய்ந்து ஏறிக்கொண்டது. 'என்னை முட்டாளாக்கி விட்டாயே' எனக் கர்ஜித்தது சிங்கம்.

'நானும் தான் ஏமாந்துவிட்டேன். வெவ்வேறு திறமையுள்ள எதிரிகள் ஒன்றுசேரமுடியாது என்பதையும் இப்போதுதான் உணர்ந்து கொண்டேன்' என்று கூறிவிட்டு, சிங்கம் நகர்ந்து போவதற்காகக் காத்திருந்தது பூனை.

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்கு பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைந்து அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். கட்டச்சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியங்களை கீழ்வரும் கூப்பனைப்பூர்த்தி செய்து, அதனுடன் இணைத்து அனுப்பவேண்டும்.

மாத இறுதியில் தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்கு பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :........................................

கற்கும் பாடசாலை :........................................

கற்கும் தரம் :........................................

வீட்டு முகவரி :........................................

.................. .......... ..................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் திகதி மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,தாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## சில நாடுகளின் பழைய பெயர்கள்

| | |
|---|---|
| ஈரான் | - பெர்ஷியா |
| ஈராக் | - மொசப்பத்தேமியா |
| தாய்வான் | - பார்மோசா |
| இலங்கை | - இரத்தினதுவீபம் |
| தாய்லாந்து | - சீயம் |

ம.சிவகௌரி
தரம் - 6
பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை

இங்கே மடிக்கவும்



# சிறுவர் அரங்கம்



**சிந்தனைக்கு!**
அரைகுறை அறிவு அரைக்கிணறு தாண்டுவதுபோல் ஆபத்தானது.

**அன்புச் சிறுவர்களே!**

நீங்கள் அடுத்த தவணைப் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருப்பீர்கள். இது உங்கள் வகுப்பின் முதலாவது தவணைப் பரீட்சை அல்லவா? நீங்கள் நினைத்துப் பார்க்கமுடியாத அளவிற்கு காலம் ஓடிக்கொண்டிருக்கின்றதல்லவா, சிறுவர்களே காலம் பொன்னானது. அதனை சிறுதுளியளவேனும் வீணாக்கக்கூடாது. கிடைக்கும் நேரம் எல்லாம் நல்லவற்றைப் படிக்கவேண்டும். நல்ல செய்கைகளைச் செய்யவேண்டும். பெரியோருக்கும், வலுவிழந்தோருக்கும் உதவவேண்டும். பெரியோரைக் கனம்பண்ணப் பழகிக்கொள்ள வேண்டும். அத்தோடு, உங்களையும் உங்கள் ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்ளமுடியும். காலம் உருண்டோடிக்கொண்டிருக்கும் வேளையில், கல்வியையும் பிடித்துக்கொண்டு நீங்களும் ஓடவேண்டும். இலத்திரனியல் மயமான இரும்புகளுடன் வாழும் உலகத்தில், இனிமையான இளமையான காலம் பள்ளிப்பருவம் மட்டுமே. இழந்தவைகள் எதையும் மீளப்பெறலாம், ஆனால் காலம் மீளப்பெறமுடியாதது. எனவே காலத்தை மட்டும் வீணாக்காது, கல்வியில் கண்ணாயிருங்கள்.

## புகை ஏன் மேல்நோக்கிச் செல்கிறது

**புகை ஏன் மேல் நோக்கிச் செல்கிறது என்று தெரியுமா?**

ஈர்ப்பு விசையால்தான் புகை மேலே செல்கின்றது. வியப்பாக இருக்கிறதா? உண்மைதான். காற்றின் அடர்த்தியை விட புகையின் அடர்த்தி மிகக்குறைவு, அதனால் புகையைவிட காற்றின் மீது புவியீர்ப்பு விசை அதிகமாக இருக்கும். இதனால் காற்று கீழிறங்க புகை மேல்நோக்கிச் செல்கிறது.

நீராவியைச் சுமந்து லேசான காற்று மேலே செல்வதும் மேகம் உருவாவதும் இப்படித்தான். தண்ணீரில் அமிழ்த்தி ரெஜிபோம் மிதப்பதும் இப்படித்தான். புவியீர்ப்பு விசை இல்லையென்றால் புகை மேலே செல்லாது.

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

# தென்கொரியா

| | |
|---|---|
| நாடு | - தென்கொரிய குடியரசு |
| மக்கள் தொகை | - 5 மில்லியன் |
| தலைநகர் | - சியோல் |
| மக்கள் | - கொரியர்கள் |
| மொழி | - கொரியன் |
| மதம் | - சமானிசம், பௌத்தம், கொன்பூசியனிசம் |
| பணம் | - கொரியன் வொன் |
| தொழில்கள் | - மின்னியல், இயந்திர உற்பத்தி, கப்பல் வணிகம், பயிர்செய்கை, புடவை உற்பத்தி. |

ஆசியாவின் மத்திய பகுதியிலும், வடபகுதியிலும் வாழ்ந்த சீன இன மக்கள் - கிறிஸ்துவுக்கு முன் 30000 ஆண்டளவில் இந்த நாட்டை தற்செயலாகக் கண்டுபிடித்தனர்.

சீனாவின் அழுத்தங்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இந்த இன மக்கள் ஒன்றிணைந்து, இராஜதானி ஒன்றை உருவாக்கியிருந்தனர்.

கி.பி. 700 இல் 'கிலா' இராஜதானி என அழைக்கப்பட்ட பிரதேசத்தில், பல அரச மாளிகைகளும், பகோடாக்களும், கோயில்களும், பூங்காக்களும் உருவாக்கப்பட்டன. 13 ஆம் நூற்றாண்டில் மொங்கோலியர்கள் - கொரியாவில் தமது இராட்சியத்தை உருவாக்கியிருந்தனர். பின்னர் ஜோசியோன் மன்னர் ஆட்சி மொங்கோலிய இராட்சியத்தை வெற்றிகொண்டது. இந்தக் காலத்தில் இவர்கள் தமக்கென எழுத்து வடிவத்தை உருவாக்கிக் கொண்டனர்.

1592 இல் கொரியா - ஜப்பானியர்களால் வெற்றி கொள்ளப்பட்டது. பின்னர் சீனா - தென்கொரியாவை ஆக்கிரமித்துக்கொண்டது. பின் மஞ்சு மன்னராட்சியை உருவாக்கிக்கொண்டது. இதன் பின்னால் தென்கொரியாவில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. 20 ஆம் நூற்றாண்டுவரை தென்கொரியா வெளிநாட்டுத் தொடர்புகளைத் துண்டித்திருந்தது. 2 ஆவது உலக யுத்தம் முடியும் வரை ஜப்பான் தொடர்ந்து தென்கொரியாவில் நிலை கொண்டிருந்தது. போரின் பின் அமெரிக்கா- தென்கொரியாவையும், ரஷ்யா - வடகொரியாவையும் ஆக்கிரமித்துக்கொண்டது. தென்கொரியாவில் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு, அது தன்னை சுதந்திரநாடாகப் பிரகடனப்படுத்தியது. இந்தவேளை வடகொரியா அதன் மீது போர் தொடுத்தது.




இதன் விளைவாக இரு நாடுகளிடையேயும் போர் ஒன்று மீண்டும் ஆரம்பித்தது. ஜனாதிபதி 'கிம்' - வடகொரியாவுடனான தொடர்புகளை மீண்டும் 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஏற்படுத்திக் கொண்டார். 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இந்த அரியபணிக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது.

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- ம.பகீரதன்
கற்கும் பாடசாலை :-
கொக்குவில் இந்துக் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல், கிரிக்கெட்.



முழுப்பெயர் :- ம.லோகிதா
கற்கும் பாடசாலை :-
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், முத்திரை சேகரித்தல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- சி.வாகீசன்
கற்கும் பாடசாலை :-
மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், கதைப்புத்தகம், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- சி.அமலதாஸ்
கற்கும் பாடசாலை :-
கோப்பாய் மத்திய மகா வித்தியாலயம்
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர் :- கி.தர்மினி
கற்கும் பாடசாலை :-
இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், இசை ஆர்வம்.

முழுப்பெயர் :- யோ.பாவரூபன்
கற்கும் பாடசாலை :-
சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள்:
பத்திரிகை வாசித்தல், விளையாட்டு.

முழுப்பெயர் :- மு.ரதீஸ்
கற்கும் பாடசாலை :-
யாழ்ற்றன் கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
ஓவியம் வரைதல், பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- பே.தர்ஷா
கற்கும் பாடசாலை :-
வைத்தீஸ்வராக் கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், சித்திரம் வரைதல்.

முழுப்பெயர் :- வெ.தர்ஷா
கற்கும் பாடசாலை :-
மகாஜனாக் கல்லூரி
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல், ஓவியம் வரைதல். விளையாட்டு.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :...........................
கற்கும் பாடசாலை :...........................
கற்கும் தரம் :...........................
வீட்டு முகவரி :...........................
பிறந்த திகதி :...........................
ஆர்வமுள்ள துறைகள் :...........................
...........................


............... ...............
திகதி ஒப்பம்

............... ...............
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



**ஒன்று தொடக்கம் 90 வரையான இலக்கங்களை இணைத்து ஓவியம் ஒன்றை வரைந்துகொள்ளுங்கள்**



### கணினி பற்றிய சில சுருக்கக் குறியீடுகள்

1. CPU - Centrel Processing Unit
2. CD - Compack Disk
3. WWW - world wide web
4. PC - Personal Computer
5. ISP - International service Provider
6. ARPA - Advanced Research Project Agency (முதன் முதல் தோன்றிய Net Work)
7. P III - Pentium three
8. E-Commerce - Electronic Commerce
9. $MP_3$ - Music Protocol three
10. Ctrl - Control

தி.சாரங்கன்
கொக்குவில் இந்துக் கல்லூரி

## My Self

My name is Sivagowri
My Father name is Mahendren.
My Mother name is Yogarani.
I am ten years old.
I study at J/Pandaterupp girl's high - school.
I am in grade six.
I live at Pandateruppu.
My pet is a Cat.
My friend name is Galagini.
I want to be a Doctor.

M.Sivagowri
J/Pandaterupu girl's high school
Grade - 6

## சந்தேகம் - விளக்கம்

**கூன்விழக் காரணம் என்ன? கூன்விழாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்.**



நம் முதுகுத்தண்டை நிமிர்த்தி வைத்திருப்பவை, பின்முதுகுத் தசைநார்கள். மூப்பின் காரணமாகவோ, நோயின் காரணமாகவோ இவை பலம் இழந்தால், முதுகெலும்பு முன்பாக வளைந்து கூன் விழுந்துவிடும். இரண்டாவது காரணம் - நோய்கள் . காசநோய், புற்றுநோய் போன்றவை முதுகெலும்பை அரித்து விடலாம். அதனால், முதுகில் கூன் விழலாம்.

மூன்றாவதாக - வளர்ச்சிப் பருவத்தில் விற்றமின் D பற்றாக்குறை ஏற்பட்டால், முதுகெலும்புகள் வளைந்து கூன்விழும். முதுமையில் கல்சியம் தாது உடலில் குறையும். அப்போது முதுகெலும்புகள் தேயும்.

அடுத்ததாக, புளோரைட்டு என்ற தாது இரத்தத்தில் அளவுக்குமீறி அதிகரித்துவிட்டால், அது எலும்புகளில் படியும்.

முதுகெலும்பில் அந்தத் தாது படிந்தால், பாரம் தாங்காத வண்டியின் அச்சு முறிந்துவிடுவதைப்போல, முதுகெலும்பு வளைந்து கூன்விழத் தொடங்கும்.

சிலருக்குப் பிறவியிலேயே முதுகெலும்புகளின் வளர்ச்சி சரியில்லாமல் கூன்விழக்கூடும். நிமிர்ந்து உட்காருவது, நிமிர்ந்து நடப்பது, அடிக்கடி குனிந்து வேலை செய்வதைத் தவிர்ப்பது ஆகியவற்றை நடைமுறைப்படுத்தினால், கூன்விழுவதைத் தவிர்க்கலாம்.

விற்றமின் - D, கல்சியம், தாதுக்கள் உள்ள உணவுகளில் கவனம்செலுத்த வேண்டும். இதனாலும் கூன்விழுவதைத் தவிர்க்கமுடியும்.

## விடுகதைகளும் விடைகளும்

1. தீக்குளித்தாலும், திடமாக இருப்பது எது?
2. மழைகாலம் வந்துவிட்டால், மகராசி பாட்டெடுப்பாள். அவள் யார்?
3. வரும்போது வெண் சிவப்பு, வளரவளர தகதகப்பு, போகும்போது கடும் சிவப்பு. அது என்ன?
4. கல்வீட்டுத்தாத்தா, மெதுவாகத்தான் நடப்பார். அவர் யார்?
5. வெயிலில் மலரும், காற்றில் உலரும். அது என்ன?

1. செங்கல்.
2. தவளை
3. சூரியன்
4. ஆமை
5. தாமரை.

ர.தனுஷா
பளை மத்திய கல்லூரி

## உங்கள் கைவண்ணம்



கு.மயூரன்
தரம் - 10
ஹாட்லிக் கல்லூரி.



ப.கஜேந்தினி
தரம் - 9
குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்;



பெயர் : ஜே.கிரிந்த கணேசன்
முகவரி : 58, பாரதி வீதி, யாழ்ப்பாணம்.

ஆறாவது அகவையில்;



பெயர் : வி.பகீனா
முகவரி : புத்தூர் கிழக்கு, புத்தூர்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------

முகவரி :-----------------

பிறந்த ஆண்டு:-----------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------
பெற்றோர் ஒப்பம்

# 'வெளிச்ச வீடு' சின்னத்தில் கூட்டமைப்பு போட்டியிடும்

ரெலோ இயக்கத்தின் வெளிச்ச வீட்டு சின்னத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைப் பீடத்தில் எழுந்த சர்ச்சையே இதற்குக் காரணம் என்றும் தெரியவருகிறது.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். சுரேஷ் பிரேமச்சந்திரன் அணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களும் அதற்கான இணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கூட்டமைப்பு வட்டாரங்கள் மேலும் தகவல் தருகையில்,

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீட சர்ச்சை தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. இதனால், மத்திய குழு கூட்டத்தை தலைவர் வீ. ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி கூட்ட முடியாது.

சங்கரியின் சம்மதத்துடனேயே கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட முடியும். கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் ஆனந்தசங்கரிக்கு முரண்பாடு இல்லை.

ஆனாலும், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடலாம் என்பதை ஆனந்தசங்கரியே கூட்டணியின் மததி குழுக் கூட்டத்தில் அறிவிக்கவேண்டும்.

ஆனால், மத்திய குழுக்கூட்டம் கூட்டப்படாத நிலையில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுவது குறித்து முடிவு எடுக்க முடியாது. அதனாலேதான் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோவின் வெளிச்சவீட்டு சின்னத்தில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சான்றிதழ் வழங்கல்

நாவலர் வீதியிலுள்ள சி.சி.எஸ். கணினி நிலையமும், குளோபல் விலேஜ் கொம்பியூட்டர் நிறுவனமும் இணைந்து, அங்கு கற்று வெளியேறிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வை - நாளை நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்தவுள்ளன.

## சிவராத்திரி தின விழா

அளவெட்டி கும்பிளாவளை பிள்ளையார் கோவிலில் சிவராத்திரி தினம் இந்த முறையும் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது. விசேட அபிஷேகங்கள், பூசைகள் என்பவற்றுடன், முன்பள்ளி, பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

முன்பள்ளி மாணவரகளுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு- அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தினரால் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. சிவராத்திரி தின நிகழ்வுகளை ஆலய நிர்வாகத்தினருடன் தொண்டர் சபையினரும் இணைந்து வருடா வருடம் சிறப்பாகக் கொண்டாடிவருவது குறிப்பிடத்தக்கது.(94)

## நூலக சேவை ஆரம்பம்

இணுவில் கிழக்கு சிவகாம சுந்தரி சனசமூக நிலையத்தின் நூலக சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலத்திற்குப் பினனர் கடந்த ஐந்தாம் திகதி இந்த நூலக சேவை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நூலகத்தில் அங்கத்தவராகவுள்ளவர்கள் - நூல்களை இரவல் பெறக்கூடிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. புதிய அங்கத்தவர்களாக சேரவிரும்புவோர் - நூலகப் பொறுப்பாளர் வே.கணேந்திரனிடம் ஐம்பது ரூபா அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி, விண்ணப்பபடிவத்தைப் பெற்றுக்கொள்ளும்படி சனசமூக நிலைய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (94)

## ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனால் - அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்திற்கு ஒரு லட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது. சைவ வாலிபர் சங்க நிர்வாகிகள் - நேரடியாக விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே இந்த பணம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கபபடுகிறது.

சைவ வாலிபர் சங்கத்தினரால் வருடம் தோறும் நடாத்தப்பட்டு வரும் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான சமய அறிவு மற்றும் கட்டுரை, மனனப்போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கவே இந்த நிதியுதவி பயன்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (94)

# வெங்காயச் செய்கை இந்த முறை பாதிப்பு

வெங்காயச் செய்கை இந்த முறை போதிய விளைச்சலைத் தரவில்லையென விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். கடந்த வருடம் வெங்காயச் செய்கைமூலம் விவசாயிகள் அதிகலாபம் பெற்றுக்கொணடனர். அதனையடுத்து, இந்த முறை அநேகமான விவசாயிகள் வெங்காயப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாகவிருந்தது.

இந்த நிலையில், தற்போது வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. எதிர்பார்த்தளவு விளைச்சலை தம்மால் பெற்றுக்கொள்ள இயலவில்லையெனவும், இதற்கு காலநிலை சீரின்மையும் ஒரு காரணமாக இருக்கலாம் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

அளவெட்டி, புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், இணுவில் போன்ற பகுதிகளிலேயே வெங்காயச் செயகை அதிகளவில் மேற்கொள்ளப்பட்டது. காலம் தவறிப் பெய்த மழை காரணமாகவும் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இந்தப் பகுதிகளில் பலத்த மழை பெய்தமையினால், அறுவடை செய்த காணிகளிலே வைக்கப்பட்டிருந்த வெங்காயங்கள் பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ளன. சில விவசாயிகள் வெங்காயம் அறுவடை செய்தவுடனேயே கொழும்பு, புத்தளம் போன்ற பகுதிகளுக்கு எற்றுமதி செய்துவருகின்றனர். நெற்செய்கையும் போதிய மழை வீழ்ச்சி இல்லாத காரணத்தால் பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஆனாலும், அரிசி விலையில் பெரிதாக மாற்றம் ஏற்படவாய்ப்பில்லையெனவும் நம்பப்படுகிறது. (ச)

# கொக்குவில் பாடசாலையில் தையல், மனையியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் - தையல், மனையியல் கண்காட்சியொன்று நடத்தப்படவுள்ளது.

கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலையில் - நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள இந்தக் கண்காட்சி, அன்று மாலை 6 மணிவரை இடம் பெறும்.

இந்தக் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்படும் பொருட்கள் சில விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இயங்கிவரும் தையல் பயிற்சி நிலையங்களில், உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு நுட்பமான தையல் வேலைப்பாடு கொண்ட பொருட்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

இந்தக் கண்காட்சி நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.பத்தினியம்மா கலந்துகொள்வார். (ப)

# 2003 ஆம் ஆண்டின் கல்விப் போட்டிகள்

புனர்வாழ்வு - கல்வி நிதியத்தினதும், சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசத்தினதும் ஏற்பாட்டில, 2003 ஆம் ஆண்டிற்கான கல்விப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகி இன்றும் நடைபெறுகின்றன.

எழுத்துமூலமான போட்டிகள் யாவும் நேற்றுக் காலை 9 மணி முதல் இடம்பெற்றன. யாழ். பிராந்திய போட்டியாளர்களுக்கான போட்டிகள் - யாழ். மத்திய கல்லூரியிலும், மானிப்பாய் பிராந்திய போட்டியாளர்களுக்கு - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும், தென்மராட்சிப் பிராந்தியப் போட்டியாளர்களுக்கு - கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலத்திலும், வடமராட்சி பிராந்தியப் போட்டியாளர்களுக்கு - நெல்லியடி மகா வித்தியாலத்திலும், வலி.கிழக்கு பிராந்திய போட்டியாளர்களுக்கு - சரஸ்வதி மகா வித்தியாலத்திலும் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, இன்று நடைபெறவுள்ள பேச்சு, கவிதைப் போட்டிகள் யாவும் - யாழ்.மத்திய கல்லூரியில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டி வேறு எந்த இடங்களிலும் இடம் பெறமாட்டாதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப்போட்டிகளில் வெற்றியட்டுவோருக்கு - எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.





யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் தென்னாசியப் பிரிவின் பிரதி அதிகாரி மார்க் எஸ்.வாட் தலைமையில் வந்த குழுவினர் நேற்றுமுன்தினம் ஒஸ்மானியாக் கல்லூரியை சென்று பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# தேசிய சேமிப்பு வங்கியில் வாகன தரிப்பிட வசதியில்லை

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு உரிய வாகன தரிப்பிட வசதி செய்துகொடுக்கப்படவில்லையெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த வங்கிக் காரியாலயம் தனியார் கட்டமொன்றிலேயே நீண்ட காலமாக இயங்கிவருகிறது.

இந்தக் கட்டடத்திற்கு முன்னாலுள்ள சிறிய நிலப்பரப்பிலேயே வங்கி ஊழியர்கள் தமது மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தி வருகின்றனர். வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்களும் இந்த இடத்திலேயே வாகனங்களை நிறுத்தவேண்டியுள்ளதால், இடநெருக்கடி ஏற்படுகிறது.

தற்போது இந்த வங்கி முற்றாக கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதுடன், குளிரூட்டப்பட்டுள்ளது. அத்துடன், வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் உரிய வாகன வசதிகள் செய்து கொடுக்கப்படாமையால், வஙகிக்கு வரும் வாடிக்கையாளர்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்கொளள வேண்டியுள்ளது.

வங்கிக் கட்டடத்திற்கு அருகிலுள்ள காணியில் இதற்குரிய வாகன வசதிகளைச் செய்துகொடுக்கலாம் என வங்கி வாடிக்கையாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (ச)

# ஒலிபெருக்கி அன்பளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் பாவனைக்கென ஒலிபெருக்கித் தொகுதியை - கனடா ஒன்றியத்தினர் அன்பளிப்பாக வழங்கினர்.

நெடுந்தீவிலிருந்து புலம்பெயர்ந்த கனடா ஒன்றியத்தினரே இந்த அன்பளிப்பை அளித்துள்ளனர்.

இந்த ஒலிபெருக்கி அண்மையில் இடம்பெற்ற குறித்த வித்தியாலய விளையாட்டு நிகழ்வில் முதன்முறையாகப் பாவிக்கப்பட்டதுடன், அன்றைய போட்டியின்போது கனடா ஒன்றியத் தலைவரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (113)

## காதலர்தின சிறப்பு பக்கம்

# காதலைப் புனிதப்படுத்திட காதலரே உறுதிகொள்வீர்

காதல் என்பது - ஒவ்வொரு சராசரி மனிதனிலும் தோன்றும் ஒரு வகை உணர்வு. இது சிலருக்கு ஊக்கமருந்தாகவும், சிலருக்கு பல்வேறு தடைக்கற்களாகவும், இன்னும் சிலருக்கு சொர்க்கமாகவும் விளங்கும். அது அவரவர் நிலைப்பாட்டைப் பொறுத்தது.

ஒவ்வொரு உயிரினத்திலும், காதல் குருதியுடன் கலந்தநிலையில் பரவிக்காணப்படுகின்றது. அதனால்தான், உலகம் இன்னமும் சீராக இயங்கிக்கொண்டிருக்கின்றது.

காதலை பாசமென்றும், அன்பு என்றும், இரக்கமென்றும் பல்வேறு வகையில் பார்க்கமுடியும். இது வயது, பால், இன வேறுபாட்டுக்கப்பால் தோன்றக்கூடியது. எனினும், இளவயதினரான ஓர் ஆணும், பெண்ணும் பகிர்ந்து கொள்ளும் உள்ளத்து உணர்வுப் பகிர்வே இன்றைய காதலர் தினத்தின் கருப்பொருளாய் கொள்ளப்படுகின்றது.

காதல் என்ற சொல்மூலம், ஒன்றிணையும் இரு உள்ளங்களின் இளமைக்கால உறவை சகித்துக்கொள்ள முடியாத எத்தனையோ பேர் இன்னும் எமது சமூகத்தில் உள்ளார்கள்.

"காதல்" என்றதும் அதனை அருவருப்பானதாகவும், தீண்டத்தகாத ஒரு சொல்லாகவும், வாழ்க்கைக்கு உதவாத வார்த்தையாகவும் எண்ணுபவர்கள் - தமது இளமைக்காலத்தை தாண்டிய நடுத்தர வயதிற்கு மேற்பட்டவராகவே உள்ளார்கள்.

அவர்கள் தமது இளமைக்காலத்தில் தோன்றிய பசுமையான காதலை ஒருமுறை நினைத்தார்கள் ஆயின், நிச்சயம் காதலைப் புனிதமாகவே கருதுவர்.

காதலைக் காதலுடன் காதலித்து கரம்பிடிப்பவர்கள் வாழ்வு, என்றுமே நிலைத்த, நீடித்த இன்பமான, வளமான வாழ்க்கையைக் கொடுக்கும்.

அதுவே பொறுமையற்ற, நிதானம் தவறிய, வலுவற்ற போக்கில் எதிர்கால வாழ்க்கைப் பயணத்தின் தடைகளை அகற்றமுயலாது, கைப்பிடிக்கும் காதலரின் வாழ்வு பிறரால் பழிக்கப்படுகின்ற கேலிக்கிடமான வகையில் அமைவதுடன், காதலின் புனிதத் தன்மையினை இழிவுபடுத்துவதாகவும் அமைந்துவிடுகிறது.

இத்தகையவர்களாலேயே காதல் பற்றிய தப்பபிப்பிராயங்கள் மேலும் வலுக்கின்றன.

ஓர் ஆணும், பெண்ணும் இளவயதில் காதல் கொள்ளும்போது, நிச்சயம் அந்தக் காதலில் கொஞ்சம் காமம் கலந்திருக்கத்தான் செய்யும். ஆனால், காமத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அதுவே வாழ்வாக எண்ணுவோரே "ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்" என்னும் வாக்கியத்தால் துளைக்கப்படும் நிலைக்கு ஆளாகி, காதலுக்கு அர்த்தமற்ற பொருளை அடுத்தவர்கள் அள்ளிவீச வழிவகுக்கின்றனர்.

உண்மையில் காதலிப்போர், முதலில் காதலைப் புனிதமான ஒரு வார்த்தையாக, பொருளாக எண்ணவேண்டும். உள்ளத்தில் உண்மையான மரியாதைக்குரிய பக்குவப்பட்ட நிலைப்பாட்டோடு அதனை நோக்கவேண்டும். பொழுது போக்கிற்காகவோ, உடல் இன்பத்திற்காகவோ காதலிக்கும் நயவஞ்சகமான செயலே காதலுக்கு வடுவைத் தேடிக்கொள்ளும். அப்படியான எண்ணம் கொண்டோர் இந்தநாளில் உறுதி எடுத்துக்கொண்டு காதலைப் புனிதப்படுத்த எண்ணவேண்டும். அப்போதுதான் காதலுக்கு உரிய மரியாதை கிடைக்கும்.

காதலர்களை இணைத்து வைப்பதற்காக பாடுபட்டு, தனது உயிரை தியாகம்செய்த "வலன்ரைன்" பாதிரியார் காதல் எதிர்ப்பாளர்களால் கொலை செய்யப்பட்ட தினம் என்பதாலேயே, இதனை "வலன்ரைன்ஸ் டே" என்றும் அழைக்கின்றனர். அவரது தியாகத்திற்கு உண்மையான பலன் அல்லது அர்த்தம் கிடைக்க வேண்டுமாயின், காதலிக்கப் புறப்பட்டவர்கள் அதனை உண்மையுடனும், இதயச்சுத்தியுடனும் நேசிக்க வேண்டும்.

காதலை நேசிப்பவர்களுக்கே உண்மையான காதல் தோன்றும். காதலைக் கொச்சைப்படுத்துபவர்களையும், காதலைத்தூசிப்பவர்களையும் உண்மையான காதலர்கள் தாங்கிக் கொள்ளமாட்டார்கள். காதலும் மனிதனை வாழவைக்கும். ஆனால், அதனை சரியாகப்புரிந்து கொண்டு அணுகுபவர்களையே அது வாழவைக்கும்.

கண்டதும் காதல் என்பது நிச்சயமாக அழகை முதன்மைப்படுத்தியே உதயமாகும். அதனைப் புனிதமான காதல் என்று எவ்வாறு அழைக்கமுடியும். உண்மையில் ஒருவர் மீது ஒருவர் ஏதேனும் ஓர் விடயத்திற்காக பாதிக்கப்பட்டோ அல்லது புரிந்துணர்வின் அடிப்படையில் தோன்றுவதே உண்மையான காதல். அதுவே, கடைசிவரை நீடித்து நிலைக்கும் ஆற்றல் பெற்றிருக்கும்.

காதலை முதன்மைப்படுத்தி வெளிவரும் பாடல்களாயினும்சரி, காதலை தலைப்பாகக்கொண்டு வெளிவரும் சினிமாப் படங்களாயினும்சரி தோல்வியடைவதில்லை. உதாரணமாக காதல்கோட்டை, காதலேநிம்மதி, காலமெல்லாம் காதல்வாழ்க, காதலேசுவாசம், காதல்சாம்ராஜ்ஜியம், காதலுக்கு மரியாதை எனப் பெயர்ப்பட்டியில் நீண்டுகொண்டே செல்லும் அளவுக்கு, வெற்றிப் படங்களின் பெயர் வரிசை உள்ளது. இவ்வாறு காதல் சம்பந்தமான பெயர்களுக்கு முதன்மை கொடுக்கும் எமது சமூகத்தில் உண்மையான இருவரது காதலை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் மட்டும் இல்லாதுபோய்விடுகிறது.

உண்மையான காதல் என்பது தேன்கூடு போன்றது என்பார்கள். மிகவும் கஷ்ரப்பட்டு அது ஆசைகளால் நிரப்பப்படுகிறது. அதனைக் குலைப்பது ஆபத்தானதும், மனச்சாட்சிக்குப் புறம்பானதுமான செயலாகும்.

இதனை இளம் வயதைத் தாண்டியவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என நம்பமுடியாது. அதேபோல் இளம் வயதினரும் அத்தகையோரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு காதலைக் கைவிடவோ, காதலிக்காமல் இருந்துவிடவோ போவதில்லை. ஆதாம் ஏவாள் தோன்றியபோதே காதலும் தோன்றிவிட்டது. மனிதனின் இரத்தத்துடன் கலந்துவிட்ட உயிர்ப்பிணைப்பான காதல் தோன்றாத மனிதன் மிருகமாகவே இருக்கமுடியும். பலர் தமது இளமைக்காலக் காதலை மறக்கின்றனர். சில காரணங்களால் மனச்சாட்சி இல்லாமல் அடிமனதில் காதலைப் புதைத்துவிட்டு அதனைத் தூசிக்கின்றனர்.

இது அவர் பற்றிய நல்லெண்ணத்தையும் மதிப்பையும் குறைக்குமேதவிர, இளம் சமூகத்தினர் மட்டத்தில் அவருக்கு ஒருபோதும் ஆதரவு இருக்காது.

எனினும், பெற்றோர் சம்மதத்துடன், இணைகின்ற காதலுக்கு தனித்துவமும், கௌரவமும் கிடைக்கின்றது. ஏனெனில், காதல் அனைவரையும் மகிழ்விக்கக்கூடியது. அது எவரையும் புண்படுத்தும் ஆற்றல் கொண்டிருப்பதில்லை. காதலுக்கு அனைவரின் சம்மதமும் இருப்பது அல்லது அனைவரையும் மகிழ்விக்கும் வகையில் காதலர்கள் இணைவது காதலை மேலும் புனிதப்படுத்தும்.

எனினும், அதற்கு முரண்பாடான வகையில் காதலர்களை பிரிக்க வெனத்திரண்டு நிற்கும் சில பழமைவாதிகளால், எதிர்நீச்சல் போட்டு காதல் கடலைத்தாண்டவேண்டிய கட்டத்திலேயே பல காதலர்கள் வாழ்கின்றனர்.

எது எப்படியோ காதலைப் புனிதப்படுத்தி இன்றைய நாளை இனிமைப்படுத்தி காதலர்கள் உள்ளத் தூய்மையுடன் என்றும் இணைந்து வாழ உறுதிகொள்ளவேண்டும். அதற்காகவே இந்த நாள் உலகியல் வாழ்வின் உன்னதநாள் என பல கவிஞர்கள் போற்றுகின்றனர்.

**செந்தணன்**

## நீ வரும் வரை காத்திருக்கின்றேன்...

வானத்தை மேவிய கருமுகிலையும் தாண்டி, அங்கங்கே பனித்துளிகள் வந்து விழுகின்றன. சிலிர்த்துப்போன புற்களிலும்... மழையில் நனைந்த மரங்களின் கீழ் இருந்து உலுப்பிய மரக்கொப்பிலும்... சிதறிய தண்ணீரில் நனைந்து, நாட்குறிப்பேட்டில் ஒவ்வொரு பக்கமாக சந்தித்த இடத்தில் நேரமானது கூடியும், குறைந்தும் நினைவுபடுத்தும். மனதில் மட்டும் நீயும் நானும் சந்தித்த நாட்களில் கூடுதலாகப் பயந்தவர்கள் மற்றவர்களே

தேடிப் தேடிப் பார்க்கும்போது மறைந்துவிடும் நாட்களில் நீ எதேச்சையாக சந்தித்து விடைபெறும்... பெறாத.. எனது மனசு. மேலதிகமாக எதைஎதையோ தொலைத்துவிட்டு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நானும் நீயும், ஆனால் நம்பமுடியவில்லை. கதைக்காமல் கண்ணிலே தெரிந்துவிடும் வாக்கியம் இதற்குமட்டும் எப்படி வாய்த்திருக்கின்றது.

நீண்ட வெளியில் கண்ணைக் கட்டிவிட்ட பிரமையில் யார் எல்லாம் வருவதும் போவதும் தெரியவில்லை. கதவேயில்லாத பல யன்னல்களோடு இந்த வீடு. இதற்கு மட்டும் உள்ளே சென்றுவிட மிகக் கடினமாகவும், இலகுவாக வெளியே வரமுடியாமலும் இருக்கின்றது.

சாயம் பூசாத கடற்கரை மணலில் நிறையக் கீறல்கள் விழுகின்றன. இதேபோல் பறவைகளில் இருந்து உதிரும் சிறகுகளில் சேர்ந்திருக்கும். இதற்கு மட்டும் யாரும் விதி விலக்கல்ல. இங்கு விபத்துக்கள் நடந்த வண்ணமே இருக்கின்றன. இங்கே மட்டும் வழி தவறுபவர்கள் தப்பிக்கலாம்.

தூக்கத்தைத் தேடிப்போய் காலில் விழுந்து கெஞ்சினாலும் தூக்கம் வராது. விலகி ஓடிப்போய் தூரநின்றாலும் கனவு விடாது. விலகி ஓடும்... தேடிப் பார்க்கும்... மனமிருக்காது... மறதி உண்டாக்கும்...உன்னோடு கோபம் கொண்ட நாட்களில்... குளிர்காயும் வெயில் காலம், நெருப்பாய்ச்சுடும் மழை காலம். எங்கேயாவது போய்விட்டு திரும்பி வீட்டிற்குவரும்போது வீடு தாண்டிச் சென்றதுண்டு. நீ என்னோடுசேரும் மட்டும் இப்படித்தான் இருக்கும் போலிருக்கின்றது.

**செல்வா**

## கொடுப்பாயா...?

சந்திக்கும் நேரம்
சிந்திக்க மறுக்கும்
நெஞ்சம் !
நாசிக்காற்றையும்
தூசியாயெண்ணி
தவிர்க்கத் தூண்டும் !
அஞ்சி.... அஞ்சி
கொஞ்ச நேரமுனைப் பார்த்தால்
ஆறறிவும் கெட்டுப்போகும்.
விந்தைதான்
சிந்தையெங்கும் விதையாமல் நீமுளைத்தது
கந்தையான
கற்பனத்தவசிநான்!
எந்தை கண்ணொற்றி
வணங்கு துளசி நீ
ஆற்றுப்படுத்துகிறேனென்
உணர்வை - உன்
நினைவுகளில்
தோற்றுப்போய் விடுகிறேனென்
துணிவை - உன்
ஊற்றுப்போன விழிமுன்!
வேர்க்குமென் தேகத்தின்
நீங்காத பாகம் நீ,
ஊர்க்கும் - என் உறவிற்கும்
உறைக்கின்ற பானம் நீ,
அன்பே...
ஆறடி மண் கூட வேண்டாம் - உன்
அங்குலமில்லா மனசிலோர்
இடம்வேண்டும்
கொடுப்பாயா.....?

**நெற்கொழு தாசன்**

## உனைக்காண எண்ணமெல்லாம் மாறுது தினம்!

நீ வராத
ஒரு பொழுது
உன் நினை வால்
வளருது
தினம் விழுது!
நாளைக்கு
உனக் கொரு செய்தி...
என எண்ணும்
மனம்!
உனை காண
எண்ண மெலாம்
மாறுது தினம்!
விக்கிரகமாக
இதயமதில் வீற்றிருக்கும்
காதலனே!
இன்றாவது
மௌனமதை கலை
காதலர் தினம் வருவது
என்றாவது ஒருநாள் தான்!

வி.அமரா

## காரல் மார்க்ஸ் - ஜென்னி

காதல் தனியிசையன்று. ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்குமான இரு குரலிசையுமன்று.

காதல்... கூட்டிசை.

ஆண்... பெண் தாண்டி.. ஆணுக்குள்... பெண்ணுக்குள் ஆண் தாண்டி..

கடல், மழை, நிலா, மரம் செடி, கொடி, பூச்சி, புழு, ஆறு ,கூழாங்கல், நண்டு, நத்தை பயிர் என உலகின் அனைத்து உயிர்களுக்குமான கூட்டிசை.

வாழ்வுக்கு மேலே விரிந்து கிடக்கும் பிரபஞ்சத் தோப்புக்குள் கேட்டுக்கொண்டேயிருக்கிறது, அந்தத் தீராக்காதலின் கூட்டிசை.

அந்தக் கூட்டிசையின் அடையாளப் பெயர்கள்தான் காரல் மார்க்சு - ஜென்னி.

இணைந்த கைகள் நெகிழாமல், வறுமை அவர்களைக் கூட்டிக்கழித்து மிச்சமின்றி வகுத்தபோதும் அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கைதான் காதலின் அடையாளம்.

தனிமனிதபலவீனங்கள் அவர்களை பாதிப்பதில்லை.

பசித்த வயிற்றுக்குச்சோறில்லாமல் தமது குழந்தைகளுக்கு அமுதூட்ட நினைத்து, மார்புகளில் கசிந்தவை குருதித்துளிகள்.

வாட்டி வதைத்த குளிரில் குழந்தைகளைத் கதகதப்பாக வைத்துக்கொள்ள முடியாத வறுமையின் கொடிய கோடைகள்.

இத்தகைய முடிவற்ற துயரங்களிலிருந்து தொடங்கிய அவர்களது காதல்தான் உலகின் எல்லோருக்குமான ஒளியின் வாசல் தேடி திறந்தது.

மலை மாதிரி சோகம் கனத்தபோதும்... இந்த மண்ணுயிர்களுக்காக அருவிமாதிரி. மார்க்சைப் பொங்கிவழிய வைத்த தாய்மைக்கு இன்னுமொரு பெயர்தான் - காதல்.

அதற்கான சான்றாக அமைந்தவைதாம் கீழே தொடர்கிற மார்க்சின் மடல்வரிகள்.

'என் அன்பே! உனக்கும்
குழந்தைகளுக்கும் ஆயிரம்
ஆயிரம் முத்தங்கள்.
இவ்வுலகில் பல பெண்கள்
உள்ளனர் என்பதும் அதில்
சிலர் அழகாக உள்ளனர்
என்பதும்
அனைவரும் அறிந்ததே. ஆனால்,
என் உள்ளத்தில் ஆற்றல் மிக்க
இனிய நினைவுகளை எழுப்பும்
முகம் உன்னுடையது தவிர,
வேறில்லை.
வேதங்களோ...
கிறிஸ்தவர்களின்
புனர்வாழ்வுத் தத்துவமோ
எனக்குத் தேவையில்லை.
எனக்கு நீ போதும்.

**அறிவுமதி**

## மூச்சிலும் நிறைந்தது காதல்

உடலை உருக்கி
உணர்வை பெருக்கி
உயிரை மாற்றுவது
காதல்!
எதிரிகள் நடுவிலும்
எரிமலைக் குழம்பிலும்
எதிர் நீச்சலிட்டு ஜெயிப்பது
காதல் !
சுத்தமான நீரிலும்
சுதந்திரக் காற்றிலும்
சுவாசிக்கும் மூச்சிலும் நிறைந்தது
காதல் !
இமயமளவு உச்சியிலும்
இரவுகளின் நீளத்திலும்
இதயத்தின் ஓரத்திலும் வாழ்வது
காதல் !

**வா.வித்தியா**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்*
*பெரும்பயன் இல்லாத சொல்*

திருக்குறள்.

## நமது நோக்கு

### கேலிக்கும், கேள்விக்குமுரியதாகியுள்ள இலங்கையின் ஜனநாயகப் பாரம்பரியம்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் சமகால நடவடிக்கைகள் யாவும், இலங்கையின் - ஜனநாயகத்திற்கு முற்றும் முழுதாகச் சாவுமணியடிக்கும் அவரது மூர்க்கத்தனமான முனைப்பை வெளிப்படுத்துபவையாகவே உள்ளன.

ஜனநாயக தத்துவத்தின் அடிப்படை அம்சங்களில் பலவற்றை நாகரிகமானமுறையில் நிராகரிக்கும் சட்டவிதிமுறைகளை உள்ளடக்கியதான இலங்கையில் 82 ஆம் ஆண்டு அமுல்செய்யப்பட்ட அரசியல் யாப்பானது, ஜனாதிபதி என்ற தனிநபருக்கு அபரிமிதமான, நியாயமற்ற வகையிலான அதிகாரங்களை அள்ளி வழங்கியுள்ளதன் மூலம், ஒருவகையான சர்வாதிகார ஆட்சியை - ஜனநாயகம் என்ற பதாகையின்கீழ் நடத்துவதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது என்றே கூறவேண்டும்.

குறிப்பிடத்தக்கதும், தவிர்க்கமுடியாததுமான எந்த காரணங்களுமின்றி போதிய பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியிலிருந்த, ஐக்கிய தேசிய முன்னணியின் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை - இரவோடிரவாகக் கலைக்கும் உரிமையைத் தனதாக்கிக் கொள்ளுமளவிற்கு, ஜனாதிபதி அதிகாரம் கொண்டவராகவும், அகங்காரம் கொண்டவராகவும் இருக்கிறாரென்றால், மக்களின் தேர்வையும், அவர்களின் அபிலாஷையையும் அவர் பொருட்படுத்தும் ஒருவராக இல்லை என்றே கூறவேண்டும்.

முதலில் மூன்று அமைச்சுக்களைப் பிரதமர் - அமெரிக்காவில் நின்றநேரம் தன்வசம் எடுத்துக்கொண்டபோதே, ஜனாதிபதியின் அரசியல் நகர்வுகளின் சதித்தன்மையும், நேர்மையின்மையும் தெட்டத்தெளிவாகியது. அதற்கு அவர் அளித்த விளக்கங்கள் நம்பகத்தன்மையற்றவையாகவும், கபட நோக்கங்களை உள்ளடக்கியவையாகவும் தென்பட்ட போதும், அவர் அதை நிராகரித்து அறிக்கை வெளியிட்டார்.

அரசைக் கலைப்பதோ, தேர்தலை நடத்துவதோ அல்லது சமாதானத்தைக் குலைப்பதோ, தனது நோக்கமல்ல எனவும், நாட்டின் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்திருந்தமையே - பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுவருவதே பாதுகாப்பு அமைச்சு உட்பட, மூன்று அமைச்சுக்களைத் தன்வசமெடுத்துக்கொண்டமைக்குக் காரணம் என்றும் அவர் நியாயம் கற்பிக்கமுனைந்தார்.

ஆனால், அவரது உண்மையான இலக்கு இவையல்ல. ரணில் தலைமையிலான ஆட்சியையும், அதன் சமாதான முன்னெடுப்புகளையும் சிதைப்பதே அவரின் பிரதான குறியாக இருந்தது.

அதனால்தான், சர்வதேச சமூகம் ரணிலின் அரசுடன் அரசியல் குழப்பங்கள் தீர ஒரு இணக்கப்பாட்டுக்கு வருமாறு சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலை ஏற்பட்டது.

ஆனால், அவர் அதனைப் பொருட்படுத்தும் நிலையில் இல்லை. அவர் தொடர்ந்தும் அரசுக்கு நெருக்கடியைக் கொடுக்கும் நோக்கிலேயே செயற்பட்டுவந்தார்.

சமாதானத்திற்குத் தான் விரோதியல்ல என்று கூறிக் கொண்டே, சமாதான முயற்சிகளுக்கு ஆப்புவைக்கும் அடுத்த கட்ட நடவடிக்கைக்கான வியூகத்தை அமைப்பதில் ஆர்வம் கொண்டவராகச் செயற்பட்டு, சமாதான விரோத சக்தியான ஜே.வி.பியுடன் கூட்டணியை அமைத்து கொண்டார்.

நாடாளுமன்றத்தை நள்ளிரவுப் போதில் கலைத்து, அது குறித்த அறிவிப்பை வெளியிட்டபோது, அவரது அரசியல் அபிலாஷையின் வடிவம் புலனாயிற்று. அதற்கும் அவர் கொடுத்த விளக்கம் அர்த்தமற்ற ஒன்றாகவே இருந்தது.

அதனைத் தொடர்ந்து அவர் மேற்கொண்ட அமைச்சு மாற்றம், அமைச்சுகள் நீக்கம் போன்ற நடவடிக்கைகள் யாவும் ஜனாநாயகத்திற்கு விரோதமான செயற்பாடுகளாகவே இனங்காணப்பட்டுள்ளன. அரசியல் யாப்பின் விதிமுறைகளினை, நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்துவதன்மூலம் மீறி, தனது சர்வாதிகாரத் தனத்தை வெளிப்படுத்தியுள்ளதன்மூலம், ஜனாதிபதி தனது சுயமுகத்தைத் தரிசிக்க வைத்துள்ளார்.

தேர்தல் ஒன்றை நாடு எதிர்கொள்ளவுள்ளவேளையில், ஜனாதிபதியின் அதிரடி அதிகார நடவடிக்கைகள்யாவும், இலங்கையின் ஜனநாயக ஆட்சிமுறைமையை குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடுகளாகவே அமைந்துவருகின்றன.

உண்மையில் 1995 முதல் 2002 வரையிலான 7 ஆண்டு கால சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியின்போதான போர் நடவடிக்கைகள் காரணமாக அதலபாதாளத்துள் விழுந்த இலங்கையின் பொருளாதாரத்தை, கடந்த இரண்டாண்டுகால சமாதான சூழலே ஓரளவுக்கு நிமிர வைத்துள்ளநிலையில், தனது சுயநல அரசியல் அபிலாஷைகளுக்காக அனைத்தையும் நிர்மூலமாக்க நினைக்கும் சந்திரிகா - பல கோடி ரூபா செலவில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த துடிப்பதின் - துணிந்ததின் - காரணம் எதுவானாலும், அது நியாயமான, ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருக்கப்போவது கிடையாது.

எழுபதிற்கும் அதிகமான அமைச்சர்களை நியமனம் செய்து சில வருடங்களின் முன்னர் உலக சாதனையை நிலைநாட்டிய ஜனாதிபதி - அவரது அந்த ஒரேயொரு சாதனையையும் எவரும் முறியடித்துவிடக்கூடாது என்பதற்காகவே, இந்த அமைச்சுக் குறைப்பு நடவடிக்கையை மேற்கொண்டாரோ தெரியவில்லை.

எதுவானாலும், ஜனநாயகம் என்பது இலங்கையில் கேலிக்குரிய ஒன்றாக மட்டுமல்ல, கேள்விக்குரிய ஒன்றாக மாறிவிட்டது என்னவோ உண்மைதான்.

இதற்கு சிங்களப் பேரினவாத தலைமைகள் அனைத்தினதும் அரசியல் சுயநல அணுகுமுறையே காரணமாகும்.

## நாடும் நடப்பும்



செய்தி :- பின்லேடனின் அல்கொய்டா இயக்கத்தினருக்கான அதிர்ச்சியூட்டும் பயிற்சிகள் பற்றிய தொலைக்காட்சிப்படங்கள் முதல்தடவையாக ஒளிபரப்பப்பட்டன

# இணக்கப்பாடு ஏற்பாடாவிடின் சுயேட்சையாக ஆனந்தசங்கரி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி எதிர்வரும் பொதுத்தேர்தலில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான முன்னெடுப்புகளில் அவர் இறங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பொதுத்தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்துத்தான் ஆலோசித்துவருவதாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் நியமனக்குழுவின் கூட்டத்திற்குப் பின்னரே இறுதிமுடிவினை எடுக்கவுள்ளதாகவும் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார். கட்சியின் தேர்தல் நியமனக்குழுவினைக் கூட்டவேண்டும் என்று கட்சியின் செயலாளர் இரா.சம்பந்தன் அறிவித்தார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி இதனைக் கூட்டுவதற்கு நான் சம்மதம் தெரிவித்துள்ளேன். ஆனால், இது குறித்து அவர்கள் பதிலெதனையும் தெரிவிக்கவில்லை என்றும் ஆனந்தசங்கரி கூறினார். தேர்தல் நியமனக்குழுவில் எனது கோரிக்கைகளுக்கு இணங்கினால், ஒன்றாகப் போட்டியிடுவது குறித்து சிந்திக்கமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். தேர்தல் நியமனக்குழுவில் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரிக்கும், செயலாளர் இரா.சம்பந்தன் தலைமையிலான அணியினருக்கும் இடையில் வேட்பாளர் நியமன விடயத்தில் இணக்கம் ஏற்படவில்லையானால், கூட்டணியின் தலைவர் தனித்து சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட வேண்டியநிலையும், ஏனையவர்கள் தனித்து போட்டியிட வேண்டிய நிலையும் ஏற்படும்.

இவ்வாறு கூட்டணியினர் இரண்டாகப் போட்டியிட முன்வந்தால், தமிழர் விடுதலைக்கூட்டணியின் சின்னத்தினை இருதரப்பினரும் பயன்படுத்த முடியாதநிலை ஏற்படும். தனது அனுமதியின்றி கட்சியின் கூட்டங்களை நடத்தக் கூடாதென உத்தரவிடக்கோரி கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி - கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தொடர்ந்த வழக்கில், இதற்கான தடையுத்தரவு அடுத்தமாதம் 16 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே, இந்த இக்கட்டானநிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியினர் இணைந்து போட்டியிட முன்வராவிட்டால், கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தை எவரும் பயன்படுத்தமுடியாது. இதனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் - உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட முடியாதநிலை ஏற்படும். கடந்தமுறை தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் உதயசூரியன் சின்னத்திலேயே கூட்டமைப்பு போட்டியிட்டிருந்தது. ஆனால், கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியுடன், கூட்டணியின் மாற்று தரப்பினர் இணக்கத்திற்கு வராவிடின், வேறொரு சின்னத்திலேயே கூட்டமைப்பு போட்டியிடும்நிலை ஏற்படும். கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் சின்னமொன்றில் கூட்டமைப்பு ஒன்றிணைந்து போட்டியிடக்கூடிய வாய்ப்புகளை அதிகமாக்கியுள்ளன. எதிர்வரும் 24 ஆம் திகதிக்குள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யவேண்டியநிலையில் இத்தகைய இழுபறிநிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மிலிந்தவின் ராஜினாமாக் கடிதம் எழுத்துமூலம் அறிவிக்கவும்!

## ஜனாதிபதி கோரிக்கை

அமைச்சர் மிலிந்த மொறகொட தமது அமைச்சுப் பதவியிலிருந்து விலகவிரும்பினால், அது குறித்து தமக்கு எழுத்துமூலம் அறிவிக்கும்படி அவருக்கு ஆலோசனை வழங்குமாறு பிரதமர் ரணிலை - ஜனாதிபதி சந்திரிகா கேட்டுள்ளார்.

அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதற்கான ராஜிமானாக் கடிதத்தை அரசியலமைப்பின் 47(பி) சரத்தின் படிகையளிக்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க கடிதம் மூலமாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மிலிந்த மொறகொட பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சிலிருந்து ராஜினாமா செய்வதாகத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை பிரதமர் அனுப்பியமைக்கும் பதிலளித்து ஜனாதிபதி இந்தக் கடிதத்தை எழுதினார்.

இவ்வாறு அமைச்சர் மிலிந்த மொறகொட இராஜினாமாக் கடிதத்தை கையளிப்பாராயின், பிரதமர் பிரேரித்துள்ளதன்படி நிதியமைச்சர் கே.என்.சொக்ஸியிடம் அவரது பொறுப்புக்களைக் கையளிக்கமுடியும் என்றும் மேலும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உயர்தர வகுப்பு தமிழ்ப்பாடத்தை மீளாய்வுசெய்ய நடவடிக்கை

கல்விப்பொதுத்தராதர உயர்தரத் தமிழ்ப் பாடத்திட்டத்தை மீளாய்வுசெய்து, புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது நடைமுறையிலுள்ள உயர்தரத் தமிழ்ப் பாடத்தினை மாற்றம் செய்வதற்கும், திருத்தியமைப்பதற்கும் தேசிய கல்விநிறுவனம் தீர்மானித்துள்ளது. இந்த மீளாய்வு செய்து புதுப்பித்த பாடத்திட்டம் - அடுத்த ஆண்டுமுதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய தேசியக் கல்வி நிறுவகம், வலயக் கல்விப் பணிப்பாளர், பாடத்திட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், வள ஆளணித் தமிழ்த்துறை சார்ந்த அறிஞர்கள் பலரிடம் இருந்தும், நூல் எழுதுவது தொடர்பாகப் பொருத்தமான ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன.

இவற்றைவிட, உயர்தர வகுப்புக்கள் உள்ள பாடசாலை அதிபர்கள், வள ஆளணியினரிடமிருந்து - தமிழ்த்துறை சார்ந்த பொருத்தமான ஆலோசனை ஏதாவது இருப்பின், தமிழ் உதவிக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்குமாறு - தேசியக் கல்வி நிறுவகத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நந்தசேனவும், தமிழ் மொழித்துறைப் பணிப்பாளர் தை.தனராஜ் ஆகியோர் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த அறிவித்தலுக்கமைய ஆலோசனைகளைத் தெரிவிக் கவிரும்புவோர் - சிஜதயாளன், தமிழ் உதவி கல்விப் பணிப் பாளர், யாழ்.வலயக் கல்விப்பணிமனை, நல்லூர் என்னும் முகவரிக்குத் தமது ஆலோசனைகளை, இந்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பிவைக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# வெள்ளிக்கிழமை தேர்தல் நடத்துவதற்கு இஸ்லாமிய அமைப்புக்கள் கண்டனம்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற பொதுத்தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதயைடுத்து, நாடளாவியரீதியில் பல்வேறு இஸ்லாமிய அமைப்புக்கள் தமது கண்டனங்களைத் தெரிவித்துவருகின்றன.

வெள்ளிக்கிழமை முஸ்லிம்களின் விசேட தினமாக அனுஷ்டிக்கப்பட்டுவருவதால், நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் இரண்டுமணிவரை முஸ்லிம்கள் பள்ளிவாசல்களில் விசேட ஜும்மா தொழுகைகளில் ஈடுபடவேண்டியுள்ளது. இதனால் முஸ்லிம்கள் இரண்டு மணித்தியாலங்கள் வாக்களிப்பில் ஈடுபடமுடியாதநிலை ஏற்பட்டிருப்பதாகவும், இதனால் முஸ்லிம்களின் வாக்களிப்பு வீதம் குறைவடையும் சாத்தியங்கள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


மேலும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்ற முஸ்லிம் உத்தியோகத்தர்கள் வாக்களிப்பு நிலையத்திலிருந்து வெளியேறி, பள்ளிவாசல்களுக்குச் செல்லமுடியாதநிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, எதிர்வரும் பொதுத்தேர்தல் தினம் வெள்ளிக்கிழமையாக இருப்பதால், முஸ்லிம்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களைக் கருத்திற்கொண்டு வேறொரு தினத்தில் பொதுத்தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை வெளியிடுமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க ஆகியோரிடம் இஸ்லாமிய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

வாரநோக்கு

- யாழவன்.

# பொதுத் தேர்தலுக்கு ஏப்ரல் - 2 ஐ விட ஏப்ரல் - 1 பொருத்தமானதாக இருக்கும்



கடந்தவாரம் - இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரையிலே மிகவும் மூக்கியமான வாரமாக அமைந்துள்ளது. பல அரசியல்வாதிகளின் இந்நாள் பதவியை முன்னாள் பதவியாக்கிவிட்டு நகர்ந்து சென்றுள்ளது. கடந்தவாரம் அதாவது, இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால், அரைகுறை ஆயுளுடனேயே இலங்கையின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

நாடாளுமன்றக் கலைப்பானது ஏற்கனவே கலைக்கப்பட்டதொன்றாக இருந்ததனால், மக்கள் மத்தியிலே அவ்வளவு அதிர்ச்சியை உடனடியாக ஏற்படுத்தவில்லை. ஆனால், பல அரசியல்வாதிகளின் வயிற்றிலே புளியைக் கரைத்துள்ளது. மீண்டும் ஒரு தேர்தல் வரப்போகின்றது. எம்மால் மீண்டும் பதவிக்கு வர முடியுமா? எமது திருகுதாளங்கள் எல்லாவற்றுக்கும் சேர்த்து, மக்கள் பதிலடி தருவார்களா? என்றும், பதவிக்கு வந்தாலும் ஆட்சி பீடம் கிடைக்குமா? அதன்மூலமாக அமைச்சர் ஆகலாமா? என்றெல்லாம் பல கேள்விகள் அவர்கள் முன்னே இடியென வீழ்ந்து கிடக்கின்றன.

இந்த நிலையில், 13 ஆவது பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாடு தயாராகிவிட்டது. தற்பொழுது பத்திரிகைகளின் பக்கங்களைப் புரட்டினாலே தேர்தல் பற்றிய செய்திகளும், அதுதொடர்பாக அரசியல்வாதிகள், கட்சிகளின் பேட்டிகளும்தான் நிரம்பிக் கிடக்கின்றன. முரண்டுபிடித்த சில அரசியல்வாதிகள்கூட, தற்பொழுது புரண்டுவிட்டார்கள். முன்னர் - முயலுக்கு மூன்று கால்கள் என, அதிகார ஆணவத்தால், விவாதித்த சிலரும், தற்போது முயலுக்கு நான்கு கால்கள்தான் என்பதை ஒருவாறு ஒத்துக்கொண்டுள்ளனர்.

அல்லாவிடின், ஒத்துக்கொள்ளவேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இதற்கு எமது ஆனந்தசங்கரியாரும் விதிவிலக்கு அல்ல. தமிழ்மக்களுடைய ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்ற உண்மையை முன்னர் ஏற்றுக்கொள்ள மறுத்த அவர், அந்தக் கருத்துக்கு எதிராகவும், பல தடவைகள் கருத்துக்களை வெளியிட்டு வந்தார். இது கட்சியின் தற்போதைய கொள்கைகளுக்கு முரணானது எனத் தெரிவித்த, அவரது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர், சங்கரியாரின் கட்சித் தலைமைப் பதவியையே கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் நடந்துகொண்டார்கள். இதனால், உயர்நீதிமன்றம்வரை செல்லவேண்டியநிலை சங்கரியாருக்கு ஏற்பட்டது.

தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள் - நடைபெற்ற குத்துவெட்டுக்களால், சந்தி சிரிக்கும் நிலை ஏற்பட்டது. ஆனால், தற்போது சங்கரியார் - தனது நாக்கை கழற்றி மறுபுறமாக பூட்டிவிட்டார் போலுள்ளது. சமாதான முயற்சிகளை சரியான முறையிலே முன்னெடுத்து, நிரந்தரத்தீர்வை அணுகவேண்டுமானால், விடுதலைப் புலிகளுடன் மட்டும்தான் பேசவேண்டும். வேறு எவருடனும் பேசுவதால், எவ்விதப் பயனும் கிட்டாது என்றெல்லாம், தற்போது கருத்துக்களை அவ்வப்போது, அள்ளித் தெளித்துவிடுகிறார்.

இந்தக் கருத்தை - ஜனாதிபதியைச் சந்தித்தபோதும், வலியுறுத்திக்கூறியிருக்கிறார். இதன்மூலமாக பதவிக்கதிரையில் தொடர்ந்து இருப்பதே அவரது நோக்கமாக இருக்கலாம்.

இவ்வாறு 13 ஆவது பொதுத் தேர்தல் பலருக்குப் புதிய ஞானோதயத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியும், ஜனாதிபதி தேர்தல் ஆணையாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். ஏப்ரல் 2 ஆம் திகதியைவிட, ஏப்ரல் முதலாம் திகதியே தேர்தலை நடத்துவதற்குப் பொருத்தமானதாக இருக்குமென்பது எமது கருத்தாகும்.

ஏனெனில், ஏப்ரல் முதலாம்திகதி சர்வதேச முட்டாள்கள் தினம். அந்தத்தினத்தில் வாக்காளர்கள் முட்டாள் ஆகுவது அவர்களுக்கு வேதனையளிக்காது. பிறிதொரு தினத்திலே திட்டமிட்டு முட்டாளாக்குவது அவர்களுக்கு இழைக்கப்படும் மனித உரிமை மீறலாக அமையலாம். ஏனெனில், கடந்துசென்ற தேர்தல்களில் - கொட்டும் மழையிலும், கொழுத்தும் வெயிலிலும், நீண்ட வரிசையிலும், நிறைய எதிர்பார்ப்புக்களுடனும் காத்துநின்று வாக்களித்தும், அவர்கள் எண்ணங்கள் எதுவுமே நிறைவேறவில்லை. அவர்கள் வெறும் முட்டாள்களாக்கப்பட்டதுதான் மிச்சம். இது சிங்கள மக்களுக்கும் பொருந்தும்.

அநேகமாக சிங்கள மக்கள் - 'சமாதானத்துக்கான ஆணையையும், தமது விருப்பத்தையும், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்குக் கடந்த தேர்தலின் போது வழங்கியிருந்தனர். ஆனால், அந்த மக்கள் ஆணையைக்கூட கருத்திலெடுக்காது தன் சுயலாப அரசியலுக்காக குறுகிய நோக்கத்துடன், சமாதான முயற்சிகளுக்குத் தடைகளை விதித்து, அமைச்சுக்களை பறிமுதல் செய்து, தன் அதிகாரத்தைக் காட்டிய ஜனாதிபதி அதன் உச்சமாகத் தற்போது நாடாளுமன்றத்தையும் அரைவயதுடன், கலைத்துவிட்டார். எனவே, அவரது கணிப்பிலே சமாதான விரும்பிகளாக ரணிலுக்கு வாக்களித்த சிங்கள மக்களும் முட்டாள்கள்தான்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரையிலும், அவர்கள் கடந்த தேர்தலுக்காக வாக்குச் சாவடியிலே நின்றபோது, பல வண்ண வண்ணக் கனவுகளை கண்டார்கள். ஆனால், அவற்றில் எதுவுமே இதுவரை முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. தமது உரிமைகளை, சமாதான வழிமூலமாக வென்றெடுக்கமுடியுமென நம்பியவர்களுக்கு, சில சலுகைகள் மட்டுமே ஆனைப் பசிக்குச் சோளப்பொரிபோல், அள்ளித் தெளிக்கப்பட்டன. அவற்றில்கூட எத்தனையோ இடையூறுகள்.

> **நாடுபோகிற போக்கைப் பார்த்தால், மீண்டும் 2005 ஆம் ஆண்டிலும் பொதுத் தேர்தல் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஜனாதிபதி தொடர்ந்தும் இரு வருடங்கள் பதவிவகிக்கத்தான் போகிறார். எனவே, அவரது விருப்பத்திற்கு மாறாக இந்தமுறை ஆட்சி நிலவரங்கள் அமையுமானால், அடுத்தவருடமும் பொதுத்தேர்தல் நடத்தப்படும். இது அவரது பாணி. மக்கள்தான் பாவம்.**

அதிலும் குறிப்பாக யார் யாருக்கு வாக்களித்து, நாடாளுமன்ற உறுப்பினர்களாக்கிவிட்டார்களோ, அவர்களை யாழ்ப்பாணத்தில் காண்பதென்பது குதிரைக் கொம்பாக இருந்தது. சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் யாழ்.வருகை இரகசியமாகப் பேணப்பட்டதுடன், வரவேற்புக்குப் பெரும் படைப்பாதுகாப்பும் வழங்கப்பட்டது. அவர்கள், யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த, ஒரு சில மணித்துளிகளில் ஓரிரு வினாடிகள் சந்தித்துப் பேசுவதே முடியாத காரியமாகவிருந்தது.

எமது குடாநாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், இங்கு தரித்துநின்ற காலத்தைவிட, தென்னிலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ தங்கிநின்ற காலமே அதிகம். இவ்வாறான நிலையில் இவர்களுக்கு வாக்களித்து, பதவிக் கதிரைக்கு அனுப்பி வைத்த தமிழ்மக்களும் சுத்த முட்டாள்கள்தான்.

எனவே, ஏப்ரல் முதலாம் திகதியே பொதுத் தேர்தலுக்குப் பொருத்தமான தினமாகும். தற்போது நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கே சில பகுதிகளிலிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. ஏப்ரல் 2 வெள்ளிக்கிழமை வருவதால், முஸ்லிம் மக்கள் வாக்களிப்பது கடினமாகவுள்ளது. அவர்கள் அன்றையதினம் தமது முக்கியமான தொழுகையை மேற்கொள்ளவேண்டியுள்ளது என, முஸ்லிம் அமைப்புக்கள் எதிர்ப்புக் கிளப்பி, ஜனாதிபதிக்குக் கடிதமும் அனுப்பியுள்ளன.

அத்துடன், ஏப்ரல் மாதம் வழமையாக க.பொ.த (உ/த) பரீட்சை நடைபெற்றுவருகின்றது. இந்தப் பரீட்சையும் தற்போது தேர்தலைக் காரணமாகவைத்துப் பிற்போடப்பட்டுள்ளது. இது மாணவர்களின் உற்சாகத்தைக் குறைக்கும் என்பதுடன், தேர்தல் அசம்பாவிதங்கள் காரணமாகவும், புதிய அரசு பதவிக்கு வருவதாலும், பரீட்சையை நடத்துவதிலே சிக்கல்களைத் தோற்றுவிக்குமெனவும் காரணம் கூறப்படுகிறது. இதனைக் கவனத்தில் கொண்டு, உயர்தரப் பரீட்சையை நடத்தியபிற்பாடு தேர்தலை வைக்கவேண்டுமென, மாணவர்களின் பெற்றோர்கள் கல்வியமைச்சருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் கல்வியும், பரீட்சையுமே தேர்தலைவிடப் பெரிதாகத் தெரிகின்றது. அது உண்மையான ஏற்றுக்கொள்ளத்தக்க விடயமும்கூட. ஆனால், அசியல்வாதிகள் தமது தடைதாண்டல் பரீட்சையாகக் கருதும் தேர்தலையே அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகிறார்கள். அவர்கள் கல்வியையோ, நாட்டின்பொருளாதார நிலையையோ கவனத்தில் எடுப்பதாக இல்லை.

இல்லாவிடின், நான்கு ஆண்டுகளுக்குள்ளே மூன்று பொதுத்தேர்தலை எதிர்கொள்ள வேண்டியநிலை நாட்டுக்கு ஏற்பட்டிருக்குமா? 2000 ஆம் ஆண்டில் ஒருதேர்தல். அதன்பின் 2001ஆம் ஆண்டில், இப்போது மீண்டும் 2004 ஆம் ஆண்டில். 2001 ஆம் ஆண்டுத் தேர்தல் சரியான காலப்பகுதிக்குரியது. அதன்படி நான்குவருட ஆயுட்காலம்கொண்ட நாடாளுமன்றத்துக்கான அடுத்ததேர்தல், 2005 ஆம் ஆண்டிலேயே நடத்தப்படவேண்டும்.

நாடுபோகிற போக்கைப் பார்த்தால், மீண்டும் 2005 ஆம் ஆண்டிலும் பொதுத் தேர்தல் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஜனாதிபதி தொடர்ந்தும் இருவருடங்கள் பதவிவகிக்கத்தான் போகிறார். எனவே, அவரது விருப்பத்திற்கு மாறாக இந்தமுறை ஆட்சி நிலவரங்கள் அமையுமானால், அடுத்தவருடமும் பொதுத்தேர்தல் நடத்தப்படும். இது அவரது பாணி. மக்கள்தான் பாவம்.

நாட்டின் பொருளாதாரமும், பொதுத்தேர்தல் ஒன்றைத் தற்போது எதிர்கொள்ளக்கூடிய நிலையிலே இல்லை என்பது, ஆய்வாளர்களின் கருத்தாகும். ஆனால், அதையெல்லாம் காதிலே வாங்கிக்கொள்ள ஜனாதிபதி தயாராகவில்லை. கடன்பட்டாவது பொதுத் தேர்தலை நடத்தவேண்டுமென்பதே அவரது அவா.

நாட்டுக்குக் கிடைக்கவிருந்த சர்வதேச நிதியுதவியும் தடைப்பட்டுவிடும் அபாய நிலையும் தற்போது தோன்றியுள்ளது. எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவிருந்த, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் வொஷிங்டன் மாநாடும் ரத்தாகலாம் எனவும் அஞ்சப்படுகிறது. நாடாளுமன்றக் கலைப்பும், ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகளும் சர்வதேச அரங்கில் பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்திருக்கிறது. இவற்றையெல்லாம் சாட்டை செய்யும்நிலையில் ஜனாதிபதியோ அவர் சார்ந்த அணியினரோ இல்லாமல் இருப்பது வேதனையான விடயம்.

என்னவோ, ஏதோ? பொதுத்தேர்தல் ஒன்று நடக்கத்தான் போகிறது. அரசியற் சூதாட்டத்திலே மக்கள் பகடைக்காய்களாக ஆக்கப்படத்தான் போகிறார்கள். மீண்டும் அவர்கள் முட்டாள்களாகத்தான் போகிறார்கள். இதுதான் யதார்த்தமானநிலை.

தேர்தலை ஜனநாயக வழியிலே நடத்தி முடிப்பது என்பது முடியாதகாரியம். ஏனெனில், இலங்கையில் ஜனநாயகம் செத்துக் கடந்த நான்காம் திகதியுடன் 56 வருடங்களாகிவிட்டது. தற்போது, ஊடகத்துறை லஷ்மன் கதிர்காமரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் பொருத்தமான மனிதர்தான். இனி அரச ஊடகங்களின் பெயர்கள் எல்லாம் மாறப்போகின்றன. ஒழிப்பு மறைப்பு கூட்டுத்தாபனங்கள் உருவாகப்போகின்றன.

தேர்தல் பிரசாரங்களிலே ரணில் அரசுக்கும், புலிகளுக்கும் எதிரான கருத்துக்களே அரச ஊடகங்களை ஆட்டிப்படைக்கப்போகின்றன. ஜே.வி.பியினரின் இனவாதக் கூச்சல்களே இனி வானலைகளை அழுக்காக்கப்போகின்றன. இது இன்னும் ஓரிரு வாரங்களிலே உண்மையாகும். அப்போது உணர்ந்துகொள்ளலாம்.

கள்ள வாக்குகளும், தாராளமாகப் போடப்படும். குடாநாட்டிலும் இது பரவலாக மேற்கொள்ளப்படும். செத்தவர்கள், வெளிநாட்டுக்குப் போனவர்கள்கூட, வாக்குப் பெட்டிகளை நிரப்புவார்கள். இதனைத் தடுக்கக்கூடிய பொலிஸார் - ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பிலே, எனவே, கண்டும் காணாத மாதிரி நடந்துகொள்வார்கள்.

சில சந்தர்ப்பங்களில் தமிழர் தாயகப் பகுதிகளிலேயே தமக்கு விசுவாசமான அடிவருடிகள், ஆனசங்களைக் கைப்பற்றுவதற்கு வசதியாகக் கள்ளவாக்குகளைப் போடுவதற்கு ஏற்விதத்திலே ஜனநாயக வாதிகளின் கைகளும் கட்டிவைக்கப்படலாம். விடுதலைப் புலிகளையும் சிலவேளைகளிலே தேர்தலுக்கு இடையூறாக இருப்பதாகத் தெரிவித்து, ஓரிரு நாட்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியை விட்டு வெளியேறுமாறும் பணிக்கப்படலாம். இது நடந்தாலும், ஆச்சரியப்படத்தேவையில்லை. ஏனெனில் நாடு அதலபாதாளத்தை நோக்கித்தானே இழுத்துச் செல்லப்படுகிறது.

தேர்தல் திருவிழா வந்துவிட்டது. இனி என்ன ஒரே பிரசாரப் பீரங்கிகளின் முழக்கம்தான். சகித்துக்கொள்வோம். எல்லாம் ஒரு காலத்தில் அடங்காமலா போகப்போகிறது தமிழர் தாயகத்திலே?!

கடந்தவாரம் நாடாளுமன்றத்தை இறக்கச் செய்ததுடன், தேர்தலைப் பிறக்கச் செய்திருக்கிறது. அத்துடன், சிலரது இறப்பையும் தடுத்திருக்கிறது. ஆம், உயர்பாதுகாப்பு வலயங்களினுள்ளே அடக்கப்பட்டுள்ள தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கோரி, உண்ணாவிரதமிருந்த பதினான்கு பேரினதும், உண்ணாவிரதமும் கைவிடப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் வழங்கிய உறுதிமொழியை அடுத்தே இவர்களது உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. பிரதமரது ஆலோசகர் கலாநிதி குணசிங்கம் தென்மராட்சிக்கு நேரடியாகச் சென்று வாக்குறுதியை அளித்து, உண்ணாவிரதத்தை முடித்துவைத்தார். ஆனால், அவர் வருவதற்கிடையிலேயே வலி வடக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் உண்ணாவிரதம் வாக்குறுதி அளிக்கப்பட்டு, முடித்து வைக்கபட்டது. இது தொடர்பாகப் பொதுமக்கள் தரப்பில் பலவித கருத்து முரண்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆனால், ஒட்டு மொத்தத்தில் வாக்குறுதிகள் அளித்த எவருமே அவற்றை நிறைவேற்றக்கூடிய அதிகார வலுவை தம்மிடம் வைத்திருக்கவில்லை. உயர்பாதுகாப்பு வலயமென்பது இராணுவத்தினரின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விடயம். இது தொடர்பாக முடிவெடுக்கக்கூடிய அதிகாரம், பாதுகாப்பு அமைச்சுக்கும், ஜனாதிபதிக்குமே உண்டு. அதைவிடுத்து, பாகாப்பு அமைச்சைப் பறிகொடுத்து நிற்கும் பிரதமராலோ அல்லது கூட்டடைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாலோ எதுவுமே செய்ய முடியாது. அவர்களால், முடிந்தது எல்லாம் வாக்குறுதிகளை அளிப்பது மட்டுமே. அதனை நம்பியே உண்ணாவிரதிகள் தமது உரிமைப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளார்கள்.

நம்பிக்கெட்ட தமிழினம் மீண்டும் ஒரு முறை நம்பிவிட்டுக் காத்திருக்கிறது. இந்த நம்பிக்கையிலும் அவர்கள் கெட்டுப்போவார்களோ... பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இதேவேளை இந்த உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டபின்னர் உயர்பாதுகாப்பு வலயத்தின் எல்லைக்கு வெளியே இருந்து ஒரு சில வீடுகளை தென்மராட்சிப் பகுதிப் படையினர் மக்களிடம் கையளித்துள்ளனர். இதனையும் சிலர், தமது அரசியல் பிழைப்புக்கு ஆகாரமாக்கியுள்ளார்கள்.

ஈ.பி.டி.பியினர், தாம் மேற்கொண்டு முயற்சியின் பலனாகவே இந்த வீடுகள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டதாக அறிக்கை விடுத்திருந்தனர். ஆனால், அந்த அறிக்கையின் சூடு தணியும் முன்பே அந்தக் கருத்தை இராணுவப் பேச்சாளர் சுமேத பெரேரா மறுத்துள்ளார். தம்முடன் எவரும் இது தொடர்பாகப் பேசவில்லை எனவும், தாம் நினைத்தே இந்த வீடுகளைக் கையளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இது ஈ.பி.டி.பியினருக்கு பெருத்த அடியாக இருந்திருக்கும் என்பது உறுதி.

பொதுத் தேர்தலை மையமாகவைத்தே அவர்கள் நடப்பதைத் தமக்குச் சாதகமாக்கி, அறிக்கைவிட்டார்கள். அதற்குப் படைத்தரப்பு வில்லனாக வந்துவிட்டது. தேர்தலை நோக்கி ஈ.பி.டி.பி. விடுத்த முதலாவது அறிக்கையே தோல்வியாகிவிட்டது. முதல் கோணல் முற்றும் கோணலாகிவிடுமோ தெரியவில்லை.

ஏனெனில் எதிர்வரும் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பினர், விருப்புவாக்கு வேட்டையை விடுத்து, பொதுச் சின்னத்தின்கீழ் ஒரே கொள்கையில் திரளவுள்ளனர். இவர்களுக்கு ஆதரவாக பிரசார நடவடிக்கையிலும் பலர் குதிக்கவுள்ளனர். அவர்கள் நாடு தழுவிய ரீதியிலே முப்பதுக்கும் மேற்பட்ட ஆசனங்களைக் கைப்பற்றும் கொள்கையிலுள்ளனர். இது இவர்களுக்கு எதிராக தேர்தலில் குதிக்கும் கட்சிகளுக்குப் பெரிய சவாலாக அமையப்போகிறது. இந்தநிலையில் குடாநாட்டில், ஈ.பி.டி.பியினரின் இருப்பு கேள்விக்குள்ளாகலாம். எனவே, தீவிரமான நடவடிக்கைகளிலே அவர்கள் ஈடுபட வேண்டும்.

கடந்தவாரம் 39 அமைச்சர்களின் பதவிகளும், ஜனாதிபதியால் பறிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களின் பதவிகள் பறிபோயுள்ளன. அமைச்சரவை அந்தஸ்துமிக்க அமைச்சர் மிலிந்த மொறகொடவும், தன்மான உணர்சியுடன் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். அத்தோடு, கதிர்காமர் உள்ளிட்ட சிலருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கியதன் காரணமாகு ஜனநாயகத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டுள்ளது எனவும், கருத்துக்கள் வெளியிடப்பட்டுவருகின்றன.

பொதுத் தேர்தல் பொலிவுபொறுமா? அல்லது மீண்டும் அரசியல் பூகம்பத்தைத் தோற்றுவிக்குமா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

## நைஜீரிய வாயுக்கசிவினால் 80 இற்கு மேற்பட்டோர் பாதிப்பு!

நைஜீரியாவில் வர்த்தக மையமான லாகோசில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட வாயுக்கசிவினால் 80 இற்கு மேற்பட்ட மக்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், தீயணைக்கும் படையைச் சேர்ந்த மூவரும், குழந்தைகளும் இவற்றுள் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வாயுக்கசிவு உலோக ஆலை ஒன்றிலிருந்து ஏற்பட்டதென செஞ்சிலுவைச்சங்கம் பி.பி.சிக்குத் தெரிவித்தது. ஒகொ ஒபா என்ற பிரதேசத்தில் இந்த வாயுக்கசிவு ஏற்பட்டுள்ளதெனவும், வாயுக்கசிவு ஏற்பட்ட தொழிற்சாலைக்கு அருகில் அமைந்துள்ள சிறுவர் பாடசாலைகளில் வாயுக்கசிவு பரவியதில் சிறுவர்கள் மூச்சுத்திணறல், வாந்தி, மயக்கம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பி.பி.சி மேலும் தெரிவித்தது.

இதுவரை 500 பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளனர். லாகோசில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆயுதக்கிடங்கொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 1600 இற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு

# கப்பல்களினால் பிரிட்டனைத்தாக்க ஒசாமா பின்லேடன் குழுவினர் திட்டம்

## லண்டன் பத்திரிகை தெரிவிப்பு

(லண்டன்)

இங்கிலாந்தைத் தாக்க இரசாயன ஆயுதம் மற்றும் அணுகுண்டுகள் ஏற்றிய 15 கப்பல்களை பின்லேடன் தயார் நிலையில் வைத்துள்ளார்.

அமெரிக்காவில் பயணிகள் விமானங்களைக கடத்திச்சென்று பிரமாண்டமான கட்டடங்கள் மீது மோதிப் பேரழிவை ஏற்படுத்திய பின்லேடனின் அல்கொய்டா குழுவினர், தனது அடுத்த தாக்குதலுக்கு இங்கிலாந்தைக் குறிவைத்து இருப்பதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் நடந்ததை விட மிகப் பெரியஅளவில் இந்தத் தாக்குதலை நடத்த பின்லேடன் திட்டமிட்டு இருக்கிறாரென லண்டனிலிருந்து வெளியாகும் 'தி மிரர்' என்ற ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கார்களில் வெடிகுண்டுகளை நிரப்பி - எதிரியின் முகாம்கள்மீது தாக்குதல் நடத்தும் வன்முறையை ஈராக்கில் அல்கொய்டா தீவிரவாதிகள் தற்போது நடத்திவருகிறார்கள். அதேபோல் கப்பல்களில் பேரழிவு ஆயுதங்களான- அணுகுண்டுகள், விஷவாயு அடங்கிய இரசாயன ஆயுதங்கள் ஆகியவற்றை நிரப்பி இங்கிலாந்துக்குக்கொண்டுவந்து மிகப்பெரிய தாக்குதல் நடத்த பின்லேடன் குழு திட்டமிட்டுள்ளது.

லண்டனில் உள்ள நாடாளுமன்றக் கட்டடம் மற்றும் இங்கிலாந்துக்குச் சொந்தமான எண்ணைக் கிணறுகள், பயணிகள் கப்பல்கள், துறைமுகங்களில் இந்த ஆயுதகப்பல்களை மோதிக் குண்டுவெடிப்புகள் நடத்த சதித்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதற்காகக் கிரேக்கத்தைச் சேர்ந்த தனது நண்பரான ஒரு கப்பல் நிறுவன அதிபரிடமிருந்து பின்லேடன் 15 கப்பல்களை வாங்கியுள்ளார்.

பின்லேடனின் ஆயுதக்கப்பல்கள் ஏமன், சோமாலியா ஆகிய நாடுகளில் பதிவுசெய்யப்பட்டவை. அந்தநாட்டுக் கொடிகளுடன் அவை வலம்வருகின்றன.

ஆயுதக்கப்பல்களின் நடமாட்டம் பற்றி இங்கிலாந்தின் எம்.16 உளவுக்கப்பலும், அமெரிக்கவின் சி.ஐ.ஏ நிறுவனமும் ரகசிய புலனாய்வில் ஈடுபட்டுள்ளன. அவர்கள் உலகம் முழுவதும் பல்வேறு இடங்களில் கப்பல்களை வழிமறித்துச் சோதனை நடத்திவருகிறார்கள்.

இந்தியப் பெருங்கடல், பசுபிக் பெருங்கடல் பகுதிகளில் செனகல், லைபீரியா நாட்டுக் கொடிகளுடன் வந்த கப்பல்களில் சோதனை




நடத்தப்பட்டது.

லண்டன் தேம்ஸ் நதிக்கரையில் உள்ள நாடளுமன்றக் கட்டிடம் மற்றும் எம்.16 உளவு நிறுவன அலுவலகம், எண்ணைக் கிணறுகள், எண்ணை சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. தேம்ஸ் நதியில் கடற்படை வீரர்கள் தீவிர ரோந்துப பணியில் ஈடுபட்டுள்ளனர் மேற்கண்டவாறு மிரர் பத்திரிகை செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# அணு உற்பத்தியைத் தொடர்வதால் ஈரான் நாட்டிற்கெதிராக நடவடிக்கை

## அமெரிக்க அதிகாரி தெரிவிப்பு



ஈரான் தொடர்ந்தும் அணு ஆயுத உற்பத்திகளை மேற்கொண்டு வருவதாகவும், இதனால் அந்தநாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே ஐக்கிய நாடுகளின் அணுவாயுதப் பரிசோதகர்கள்- ஈரானில் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர், அந்தநாட்டில் அணுவாயுதங்களை உற்பத்திசெய்யக்கூடிய தரத்தில் அமைந்த யுரேனியத்தைப் பிரித்தெடுக்கும் அமைப்புக்களைக் கண்டதாகப் தெரிவித்தனர்.

ஆனால், அந்தவகையான அமைப்புக்கள் தம்மிடம் இல்லை என ஈரான் மறுத்துள்ளது. இதன்விளைவாக அணுசக்தி தொடர்பான சர்வதேச ஒப்பந்தங்களை நன்கு பரிசீலிக்கப்பட்ட பின்னர் அதனை நடைமுறைப்படுத்தவேண்டும் என அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

சட்டத்தில் காணப்படும் சில பலவீனங்களை தமக்குச் சாதகமாகப் பாவித்து ஈரான், வடகொரியா ஆகிய நாடுகள் யுரேனியத்தை உற்பத்திசெய்யமுயல்வதாகவும், இதனால் ஈரானை சர்வதேச அணுசக்தி அமைப்பிலிருந்து விலக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், அமெரிக்க அதிபரின் இந்தக் கருத்தை - சர்வதேச அணுசக்தி அமைப்பும், அணுவாயுதங்களை உற்பத்திசெய்யும் சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் வரவேற்றுள்ளன.

### பலூஜாவில் நடத்தப்பட்ட தாக்குதலில் அமெரிக்க இராணுவ அதிகாரி மயிரிழையில் உயிர்தப்பினார்!



ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அவர் தப்பித்துக் கொண்டதாகவும், அதன்பின்னர் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மேலும் ஒரு தாக்குதல் பக்தாத்தின் மேற்கில் அமைந்துள்ள அபு சரீப் என்ற பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது. இராணுவ பொலிஸ் படையின் ரோந்துப்பிரிவினர்மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இருவர் காயமடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அபு கரெய்ப் நகரில் அமெரிக்க இராணுவத்தின் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தாக்குதல் இந்த முகாமிற்கு அருகில் நடைபெற்றதாகவும், இந்தமுகாம் - ஈராக்கில் பதவியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் காலத்தில் சிறைச்சாலையாகப் பாவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கெயிட்டி ஜனாதிபதி பதவி விலகுவது அரசியல் குழப்பத்திற்கு தீர்வாகாது!

## அமெரிக்க இராஜாங்கச் செயலர் தெரிவிப்பு

கெயிட்டியில் அதிகரித்துவரும் குழப்பத்திற்கு அந்தநாட்டின் ஜனாதிபதி ஜீன் பேட்டன் அறிஷ்டைப் பதவியிலிருந்து நீக்குவது தீர்வாக அமையாதென அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின் பவல் தெரிவித்தார்.

மேலும் ஆட்சிக்குழப்பம் மிகுந்ததாக அமைந்தாலும் புதிய கட்சி தேவையில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

கனடா, கரிபியன் நாடுகளுடன் வெளிநாட்டுப் பொலிஸாரை அனுப்புவது தொடர்பாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், ஜனாதிபதி அறிஷ்டார் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் எனவும், இதனால் அவரை வெளியேற்றுவதற்குக் கூறப்படும் காரணங்கள் ஏற்கக்கூடியதல்ல எனவும் குறிப்பிட்டார்.

இதனிடையே எதிர்க்கட்சியினால் குறிப்பிடப்பட்டிருந்த எதிர்ப்பு ஊர்வலமொன்று அரச சார்பான குழுவொன்றினால் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் எதிர்க்கட்சியினர் கருத்து தெரிவிக்கும்போது - அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளும் குழுக்களுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையெனவும், படையிலிருந்து விலக்கப்பட்டோர் குழுவாக இணைந்தே வன்முறையான செயல்களை நடத்துகின்றனர் எனவும் தெரிவித்தனர்.



### ஐ.நா.பிரதிநிதி ஈராக்கின் ஆன்மீகத் தலைவரை சந்தித்தார்

ஜக்கிய நாடுகளின் பிரநிதிதி பெரிக் எக்காட் நேற்று ஈராக்கின் ஷியா முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைவர் ஆயதுல்லா சிஷ்ரனியைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் சிஷ்ரனி ஈராக்கில் தேர்தலொன்று நடத்தப்படவேண்டும் எனவற்புறுத்தியிருந்தார். சிஷ்ரனியின் கருத்தை நூறுவீதம் ஆதரிப்பதாக ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி தெரிவித்திருந்தார்.

அத்துடன் மக்களுக்குச் சேவைசெய்வதற்கு பிரதிநிதிகளை தேர்தல் மூலம் தெரிவுசெய்வது அவசியமெனவும், ஆனால் சரியான முறையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்ட பின்பே தேர்தல் நடத்தப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே ஆன்மிகத் தலைவர் ஆயதுல்லா சிஷ்ரனி - அமெரிக்க அதிகாரிகளைச் சந்திப்பதற்கு முன்னர் மறுப்புத் தெரிவித்திருந்தார்.

மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தவர்கள் மாத்திரமே இடைக்கால அரசியல் அமைப்பிற்கு அங்கீகாரம் அளிக்கவேண்டும் என குறிப்பிட்டார். அமெரிக்க அரசினால் தேர்வுசெய்யப்பட்ட ஆளும் சபைக்கு அவ்விதமான அதிகாரம் அளிக்கக்கூடாதெனவும் ஆன்மீகத் தலைவர் தெரிவித்தார். ஷியா முஸ்லிம்கள் ஈராக்கின் 25 மில்லியன் மக்கள் தொகையில் அறுபது வீதமான தொகையைக் கொண்டுள்ளனர். முன்னாள் ஈராககிய தலைவர் - ஷியா முஸ்லிம்களை மிகுந்த அழுத்தத்திற்குட்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



# பின்லேடனுக்கு ஆயுத விற்பனை; அமெரிக்க படைவீரர் ஒருவர் கைது

(வொஷிங்ரன்)

ஒசாமா பின்லேடனின் அல்கொய்டா அமைப்பிற்கு இராணுவ உபகரணங்களை விற்பதற்குத் திட்டமிட்டதாகக் கருதப்பட்டு அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செயயப்பட்ட ராயன் அன்டர்சன் - வொஷிங்டன் மாநிலத்தில் தேசிய காவற்படையில் கடமையாற்றிவந்துள்ளதாகவும், இவரை விரைவில் ஈராக்கில் படைவீரர்களை மாற்றும் திட்டத்தில் அனுப்புவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இவர் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்ட பின்னரே கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணினி வலையூடாக அல்கொய்டா அமைப்புடன் தொடர்புகள் மேற்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டவேளையில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார். 26 வயதுடைய அண்டர்சன் சிலவருடத்திற்கு முன் முஸ்லீம் மதத்திற்கு மாறியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்காவின் எதிரி ஒருவருக்கு உதவுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டார் எனக்கருதப்பட்டு இவர் கைதாகியுள்ளதாக இாணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'அண்டர்சன்' கைதான பின்னர் முஸ்லீம் மதத்தவரை அமெரிக்கப் படையில் இணைத்துக்கொள்வதில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை அமெரிக்கமக்கள் உணரத்தொடங்கியுள்ளதாக பி.பி.சி இன் நிக்சைட் தெரிவித்தார்.

ஆனால், அமெரிக்க அரசாங்கம் - ஈராக்கில் பணியாற்றுவதற்கு மேலும் முஸ்லிம் மதத்தவரை தெரிவுசெய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 22 பேரையும் விடுதலை செய்யப் பணிப்பு!

## பருத்தித்துறை நீதிவான் உத்தரவு

(வடமராட்சி)

வடமராட்சியின் இன்பருட்டி மற்றும் அதனையண்டிய கடற்பரப்பில் அத்துமீறிப்பிரவேசித்து மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில், உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்ட 22 இந்திய மீனவர்களை உடன் விடுவிக்க பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன், இவர்கள் அனைவரையும் அடுத்து வரும் 24 மணிநேரத்தினுள் இந்தியா திரும்பக் கூடியவாறு இந்தியக் கடற்படையிடம் கையளிக்கவும் அவர் பணித்தார்.

நேற்று முன்தினம் உள்ளூர் மீனவர்களினால் பிடிக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களில் 25 பேர் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களில் படகுகளின் ஓட்டிகளான மூவரை எதிர்வரும் 7 ஆம் திகதிவரையும் யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்க உத்தரவிட்ட நீதிவான் எஞ்சியவர்களையே உடனடியாக விடுவிக்கப் பணித்தார்.

நீதிவானின் உத்தரவையடுத்து விடுவிக்கப்பட்ட 22 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையூடாக இந்தியக் கடற்படையிடம் கையளிக்க ஏதுவாக பருத்தித்துறைப் பொலிஸார் விசேட வாகனம் மூலம் காங்கேசன்துறை கடற்படை தளத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இதேவேளை - பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் மேலும் இரு படகுகளின் ஓட்டிகள் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதுடன் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




'அரசியல் யாப்புச்சபை மூலமாக இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்று டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளாராமே....'

'அம்மையாரின் காது இதுபற்றியெல்லாம் கேட்காது என்று அவருக்கு தெரியாதே...! ஏழு வருஷமா அவவின்ரை ஆட்சியிலை அமைச்சரா இருந்து சொல்லாததை இப்ப சொல்லியிருக்கிறார் போலை...'

'அதில்லை மணியம்.... 'அரசியல் யாப்புத்தான் இன்றைய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம் என்பது தேவானந்தாவுக்குத் தெரியாதே.... எந்த அரசியல் யாப்புச்சபைதான்... தமிழ்மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன்வைத்ததாம்....? உதெல்லாம் தமிழன்ரை காதிலை பூச்சுத்துற வேலைதான்....!

'எந்தச் சிங்கள பேரினவாதத் தலைமையும் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைத் தரப்போவதில்லை கனகு.... ஆனா அரசாங்கங்களோடு ஒட்டி இருக்கிற தமிழ் கட்சிகளுக்கு இது ஒன்றும் விளங்கிறேலப் போலும்.... தங்களுக்கு பதவிகள் கிடைச்சா தமிழ் மக்களுக்கு உரிமை கிடைச்சதுக்கு சமன் என்று நினைக்கிறார்கள்...'

'சரியாய்ச் சொன்னாய்... இவ்வளவு காலமும் இதுதானே தொடர் கதையாய் இருக்கு.... ரணில் சமாதானத்தை இழுத்தடித்தார், சந்திரிகா சமாதானத்தின் கழுத்தை அறுத்தார்.... சிங்கள ஆட்சியாளர்கள் இதைத் தவிர வேறெதையும் நம்பிக்கை பூர்வமாய் செய்யமாட்டார்....'

'அவையிட்ட எங்கட உரிமைகளைக் கேட்டு வாங்குறது கல்லில நார் உரிக்கிற வேலைதான் என்று எண்டைக்கு எங்கட அரசியல் கட்சிகளுக்கு தெரியப்போகுதோ....?

தெருவாசி

# முஸ்லிம் தலைமை ஒன்றுபடுமாறு ஒலுவிலில் நேற்று ஆர்ப்பாட்டம்!

முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றுபடவேண்டும் எனக் கோரியும், நாடாளுமன்றத்தேர்தலை ஒரு அணியாக நின்று எதிர்கொள்ளுமாறும் வலியுறுத்தி அம்பாறை ஒலுவில் கிராமத்தில் நேற்று முஸ்லிம்மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

நேற்று ஒலுவில் ஜும்ஆபள்ளி வாசலில் ஜும்ஆதொழுகை முடிவடைந்ததும் மேற்படி பள்ளிவாசலுக்கு முன்னால் இந்த மாபெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த பெருந்தொகையான பொதுமக்களும் கலைஞர்களும் கலந்துகொண்டதுடன், முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒன்றுபடுவதன் அவசியம் குறித்த கோஷங்களையும் எழுப்பினர். (07)

### மே 6 ஆம்...

அறிவித்துள்ளது.

இதன்படி, பாடசாலை முதலாம் தவணை விடுமுறை அடுத்த மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகும். கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நடக்கும் பாடசாலைகளில் இரண்டாவது தவணை ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகும். கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறாத பாடசாலைகளில் இரண்டாம் தவணை ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி தொடக்கமும், உயர்தரப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளில் மீண்டும் மே மாதம் 3 ஆம் திகதி மூடப்பட்டு யூன் 3 ஆம் திகதி திறக்கப்படும்.

### சுதந்திரக் கட்சியின்...

யின்பியகம அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் இலங்கையின் பிரபல சட்டவல்லுநர் என்பதுடன் 'ஐலண்ட்', 'திவயின' போன்ற பத்திரிகைகளை வெளியிடும் உபாலி நியூஸ் நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராவார்.

இதுவரை அரசியலில் ஈடுபடாத இவரை, பிரதமர் ரணிலின் சொந்தத் தொகுதியில் நியமித்ததன் மூலம் அவருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் விண்ணப்பிக்க இன்று இறுதிநாள்

எதிர்வரும் 13 ஆவது நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தாம் போட்டியிடுவது குறித்து இன்று சனிக்கிழமைக்கு முன் தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும். இதற்குள் விண்ணப்பிக்கத் தவறும் கட்சிகள் போட்டியிட அனுமதிக்கப்படமாட்டாது.

1981 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் சட்டத்தில் 11 ஆம் பிரிவின் கீழ் ஏழு நாட்களுக்குள் தேர்தல் ஆணையாளரை சென்றடையக் கூடியதாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர் அறிவிக்க வேண்டும்.

இலங்கையில் 46 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் கடந்த தேர்தலின் போது பதிவு செய்யப்பட்டிருந்தன.

இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதிவு செய்யப்பட்டதை அடுத்து 47 ஆக எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வீடு அல்லது வெளிச்சவீடு...

அடுத்த வாரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் ஆனந்த சங்கரிக்கும், அந்தக் கட்சியின் மத்தியகுழுவிற்கும் இடையே நடைபெறும் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ரெலோவின் வெளிச்சவீட்டுச் சின்னத்திலோ அல்லது தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்திலோ போட்டியிடுமென பிரசன்னா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதய சூரியன் சின்னத்தை பயன்படுத்துவது தொடர்பான முடிவை தமிழர் விடுதலைக் கூட்டணி இனியும் தாமதிக்கக் கூடாது. அத்துடன், தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தைப் பாவிப்பதிலும் ஏதாவது சிக்கல்கள் இருந்தால் எமது அமைப்பின் வெளிச்ச வீட்டுச் சின்னத்தைப் பாவிக்கலாம். இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தைப் பாவிப்பதற்கு தயாராக இருப்பதாக ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

அத்துடன், சின்னத்தைப்பற்றி இங்கு முக்கியமல்ல எமது கொள்கைகள் மற்றும் பிரபலங்களே எமக்குப் போதுமாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### டக்ளஸ்...

என்று கூறப்படுகிறது.

இதேவேளை - புலிகள் ஆதரவுக் கட்சிகளான தமிழர் விடுதலைக்கூட்டணி, ரெலோ, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகியன தமிழ் தேசிய கூட்டமைப்பின் கீழ் போட்டியிடவுள்ளன.

இந்த நிலையில், கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியும் புலிகளுக்கு எதிரான கூட்டணியில் இணைந்துகொள்வார் அல்லது யாழ்.மாவட்டத்தில் சுயேட்சையாகப் போட்டியிடுவார் என்றும் அந்த இணையத்தளம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

### மீளப்புனரமைப்பு செய்வது...

லிருந்தும் தேவையான ஆதரவு வழங்கப்படவேண்டும்.

அத்துடன் இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு வெளிநாட்டு தனியார் முதலீட்டாளர்கள் உதவத் தயாராகவுள்ளனர். ஆனாலும் இவற்றைச் செய்வதற்கு இலங்கையின் அரசியல் ஸ்திரமற்ற தன்மை தடையாகவுள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் யு.எஸ்.எயிட் நிறுவனத்தினர் தமது நடவடிக்கைகளை நிறுத்த திட்டமிட்டிருந்தனர். ஆனால், பெப்ரவரி 2002 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சியை அடுத்து, இந்த நிறுவனத்தினர் தமது திட்டத்தைமாற்றி இங்கு தமது நடவடிக்கைகளை உறுதியாக மேற்கொண்டுள்ளனர்.

யு.எஸ்.எயிட். நிறுவன அதிகாரிகள் 120 மில்லியன் டொலர் பெறுமதியான திட்டத்தை ஐந்து வருடத்தில் இலங்கையில் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். இது இலங்கையின் சமாதான முயற்சிக்கு ஆதரவு தெரிவிப்பதோடு, அந்த நாட்டை சீர்திருத்தவும் வழிவகுக்கும்.

கடந்த மூன்று தசாப்தகாலமாக இலங்கையில் நடைபெற்றுவந்த போரால், சேதமடைந்த பகுதிகளை மளப்புனரமைப்புச் செய்து அந்த நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கு சர்வதேச சமூகம் தேவையான உதவியைத் தொடர்ந்தும் வழங்கவேண்டும்.

இலங்!கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அமெரிக்கா நேரடியாக நிதியுதவி வழங்குவதில்லை எனவும் மார்க் வோட் மேலும் தெரிவித்தார்.

சில முக்கிய அமைச்சுக்கள் உட்பட 39 அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றமை நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டிய பின்னர், மார்க் வோட்டின் கருத்து நேற்று வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### சுவீடன் பிரதிநிதிகள்...

30 பேரை நல்லூரில் உள்ள சுவீடன் அபிவிருத்திப் பணியகத்தில் சந்தித்து உரையாடினர்.

தொடர்ந்து, கொக்குவில் காந்திக் கிராம அபிவிருத்தி புனர்வாழ்வு மையத்திற்கு சென்று அங்கு பயிற்சி பெற்று தொழில்புரியும் தையல் பயிற்சியாளர்களைச் சந்தித்து உரையாடினர். மாலை 4 மணியளவில் யாழ். செயலகம் சென்று, அங்கு மேலதிக அரச அதிபர் பத்தினியம்மாவைச் சந்தித்தனர்.

தொடர்ந்து, மாலை 5 மணியளவில் 'கியுடெக்' காரியாலயத்திற்குச் சென்று விதவைகள், ஏழைகள் முதலானோரைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் மாலை 6.30 மணியளவில் யாழ்.ஆயர் இல்லத்தில் சர்வமதத் தலைவர்களைச் சந்தித்து உரையாடினர்.

இவர்கள் இன்று மீண்டும் தரைப் பாதையூடாக வவுனியா சென்று அங்கு மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வருவோரைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இந்தக் குழுவில் ஜக்ஸின் வலரி, பியா கொலன்ஸ்ரைன், டிக்மாட்டி, ஆன்கதறின், பாத்தனர் முதலிய சுவீடன் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுவீடன் நாட்டு அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளான மேக், கற்பலின் ஆகிய இருவரும், இரு ஊடகவியலாளர்களும் அடங்கியிருந்தனர்.

இவர்கள் போரினால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களைக் கட்டியெழுப்புவது, விதவைகள், அங்கவீனர் மற்றும் உதவியற்றோருக்கு உதவுதல் முதலான விடயங்கள் பற்றி விசேடமான கலந்துரையாடல்களை நடத்தியதுடன், அந்த விடயங்கள் தொடர்பாக உதவியளிக்கவுள்ளதாகவும் உறுதியளித்துச் சென்றனர். (ப)

### சுவீடனில்...

மன்ற உறுப்பினர்கள், தற்போதைய இலங்கையின் நிலையைக் கருத்திற்கொண்டு சுவீடன் நாட்டில் தஞ்சமடைந்திருப்போரை இலங்கைக்கு மீளவும் அனுப்பாமலிருக்குமாறு சுவீடன் நாடாளுமன்றில் தாம் குரல் கொடுக்கப்போவதாகத் தெரிவித்தனர். (ப)

# மரணஅறிவித்தல்கள்

## சின்னத்தம்பி தெய்வேந்திரம்

(அம்பாள் தேனீர்ச்சாலை உரிமையாளர் உடுப்பிட்டி)

**உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தெய்வேந்திரம் 13.02.2004 அன்று காலமானார்.**

**அன்னார் காஞ்சென்ற சின்னத்தம்பி ஆச்சிமுத்து தம்பதியினரின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்ற ஐயாத்துரை, செல்வராணியின் மருமகனும், புஸ்பவதனாவின் அன்புக் கணவரும், கிருஷாந், பார்த்தீபன் (யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), சோபிதா, சேல்விழி (மீரா) (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.02.2004 சனிக்கிழமை இன்று பி.பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.**

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல்**
**மனைவி, பிள்ளைகள்.**

(சி-2223)

## கிருஸ்ணர் சின்னையா

**(நல்லையா மாஸ்ரர் ஓய்வுபெற்ற அதிபர் - தெல்லிப்பழை)**

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக்கொண்ட கிருஸ்ணர் சின்னையா அவர்கள் 11.02.2004 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியை யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை) அன்புக் கணவரும், திருமதி ஜசிந்தா நடராசா (கனடா), செல்வி ஜனீறா (ஆசிரியை கொழும்பு இந்துக் கல்லூரி - இரத்மலானை) ஆகியோரின் அன்புத்தந்தையும் கலாநிதி எஸ்.நடராசாவின் (கனடா) அன்பு மாமனாரும், ஜெறீஸ் ஸ்ரீபன் (கனடா) சஜீலா கிறிஸ்ரீனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 14.02.2004 (இன்று) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**சி.ஜனீறா (மகள்)**
தொலைபேசி இல. - 0112 727549

*39/4 ஒபன் சைற், தெஹிவளை*

(சி-2217)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1590 திகதி: 13.02.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Z | 7 | 5 | 9 | 1 | 4 | 1 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.